بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 6:8 ஜமாதுல் அவ்வல் 1431 பக்கங்கள் = 12+8

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email: suvanam@gmail.com, www.suvanam.com

## மனிதனை புனிதனாக்கும் காதல்!

- சிபாயா ஸமான்

காதல் என்றாலே எம்மவர்களில் பலர் சீ சீ இதென்ன காதலாவது கத்தரிக்காயாவது என்றெல்லாம் புலம்பத் தொடங்கி விடுவார்கள். அப்படியல்ல காதல் பல விதத்திலும் உள்ளது, கணவன் மனைவியை காதலிப்பது, பெற்றோர் பிள்ளைகளைக் காதலிப்பது, நண்பர்கள் மற்ற நண்பர்களைக் காதலிப்பது இந்த மாதிரி சொல்லிக்கொண்டே போகலாம்.

இதுபோலத்தான் இஸ்லாத்தின் பார்வையில் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் இந்த புனிதமான காதல் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. இந்தவகையில் மனிதன் முதலில் தன்னைத்தானே காதலிக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னைத்தானே காதலிக்க கற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் தன்னைப்பற்றி ஆழமாக சிந்திக்கத் தொடங்க வேண்டும். அத்துடன் தன்னை சுயபரிசோதனை செய்து கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். தனக்குள்ளே அர்த்தமுள்ள கேள்விகளைக்கேட்டு பதிலையும் தேடிக்கொள்ள வேண்டும். இந்தவகையில் ஒரு மனிதன் தனக்குள் இந்த நான்கு கேள்விகளுக்கும் பதிலைத் தேடிக் கொள்ளட்டும். அதற்கு பதில் கிடைத்துவிட்டால் அவன் பாதை இன்ஷாஅல்லாஹ் நேரானதாகவே இருக்கும். அவையாவன.

எங்கிருந்து வந்தாய்? பதில். இறைவனிடமிருந்து வந்தேன். நீ யார்? பதில். இறைவனின் பிரதிநிதி

தொடர்ச்சி 4 ம் பக்கம் பார்க்க ...

### உள்ளே!

நபி மூஸா (அலை) அவர்களும் ஆஷுரா - 6
இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 15
சங்கதிகளும் இங்கிதங்களும் - 18
இஸ்லாத்த ஏற்ற பெண்ணுக்கு... – 19
இறை நினைவுகள் - 20
அறிவுப் போட்டி - 20
கல்வி சிறப்பிதழ் இலவச இணைப்பு 8 பக்கங்கள்

## இரண்டாம் திருமணத்தை பெண்கள் எதிர்ப்பதேன்?

சுவனப்பாதை மாதஇதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சி போட்டியில் (ஹிஜ்ரி 1430) மூன்றாம் ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை.

- ஷகிலா ஃபெரோஸ், அபுதாபி.

இஸ்லாத்தில் அனுமதிக்கப்படாத ஒன்றை முஸ்லீம்கள் ஆணாயினும் பெண்ணாயினும் எதிர்ப்பதில் வியப்பேதுமில்லை. ஆனால் இஸ்லாம் அனுமதிக்க கூடிய ஒன்றாகிய பலதார மணத்தை பெண்கள் குறிப்பாக தமிழக முஸ்லீம் பெண்கள் எதிர்க்கின்றார்கள் என்ற கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. மானுடத்தின் எல்லா பிரச்னைகளுக்கும் சரியான தீர்வுகளை சொல்லும் இஸ்லாம் அதனடிப்படையிலேயே பலதார மணத்தை பரிந்துரைக்கின்றது. அப்படியிருக்க இரண்டாம் திருமணத்தை பெண்கள் எதிர்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டதற்கான காரணத்தையும் அந்த காரணங்களின் பின்னால் உள்ள வாதங்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

### பலதார மணம் குறித்து குர்ஆன்

திருமறையின் 4 வது அத்தியாயத்தில் இறைவன் பலதார மணத்தை பற்றி குறிப்பிடும் போது மேலும் அநாதைகளின் விஷயத்தில் நீதி செலுத்த முடியாது என நீங்கள் அஞ்சினால் பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாக மும்மூன்றாக நான்கு நான்காக திருமணம் செய்து கொள்ளுங்கள் நீதம் செலுத்த மாட்டீர்கள் என நீங்கள் அஞ்சுவீர்களாயின் அப்பொழுது ஒருத்தியை மட்டும் (மணந்து கொள்ளுங்கள்) அல்லது உங்களது வலக்கரம் சொந்தமாக்கி கொண்டவளை கொண்டு மட்டும் (போதுமாக்கி கொள்ளுங்கள்) நீங்கள் அநீதி இழைக்காதிருப்பதற்கு இதுவே நெருங்கியதாகும் (திருக்குர்ஆன் 4:3) என்று குறிப்பிட்டு காட்டுகிறான்.

### இஸ்லாத்தை விமர்சிப்பவர்களின் வாதங்கள்

இஸ்லாத்தை விமர்சிப்பவர்கள் பெரும்பாலும் பலதார மணத்துக்கு இஸ்லாத்தின் அனுமதியை குறித்தே அதிகம் விமர்சிப்பவர்களாக இஸ்லாத்தை பெண்களுக்கு அநீதி இழைக்கும் மதமாக சித்தரிக்க படாத பாடுபடுகின்றனர். ஆனால் உண்மையில் இஸ்லாத்துக்கு முந்தைய ஜாஹிலிய்யா அரபு சமூகத்திலும் உலகில் உள்ள கிரேக்க ரோம, பாரசீக இந்தியா உள்ளிட்ட அனைத்து சமூகத்திலும் வரையறை இன்றி பெண்களை மணமுடிக்க கூடியவர்களாகவும் பெண்களுக்கு எவ்வித உரிமையும் கொடுக்காமல் வெறும் போகப் பொருளாக பாவித்து வந்துள்ளதையும் நாம் வரலாறு நெடுகிலும் பார்க்கலாம்.

உண்மையில் வரைமுறையின்றி எல்லையில்லாமல்

திருமணம் செய்து கொண்டிருந்த சமூகத்தில் ஒரு வரையறையை ஏற்படுத்தியது இஸ்லாமேயல்லாமல் உலகில் உள்ள எந்தமதமும் பலதார மணத்துக்கு வரையறையை ஏற்படுத்தவில்லை. மாறாக அவர்களின் இதிகாச கதாநாயகர்கள் 1000க்கும் மேற்பட்ட திருமணங்கள் செய்தவர்களாக இருப்பதை பார்க்கின்றோம். உண்மையில் இஸ்லாம் பலதார மணம் செய்வதற்கு பல கட்டுபாடுகளை விதித்து அதை ஒரு கடினமான செயலாக செய்திருக்கின்றது என்பது தான் உண்மை. மாறாக அது பலதார மணத்தை ஒரு கட்டாய செயலாக ஆக்கவில்லை.

### பலதார மணம் – தர்க்க ரீதியான ஆதாரங்கள்

உலகில் ஆண்களை விட பெண்கள் ஒப்பீட்டளவில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உடையவர்களாக இருப்பதால் நீண்ட காலம் வாழ கூடியவர்களாக உள்ளனர். பெண்களை சிசுவில் கொலை செய்யும் பழக்கம் இன்றும் உள்ள நம் நாடு போன்ற ஒரு சில நாடுகளை தவிர பிற நாடுகளில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக உள்ளனர். பண்டைய காலங்களில் போர்களில் ஆண்கள் பங்கெடுப்பதால் அதிகம் உயிரிழக்க கூடியவர்களாக இருந்ததையும் கருத்தில் கொண்டு அனைத்தையும் அறிந்த ஏகனாகிய அல்லாஹ் பலதார மணத்தை அனுமதித்து உள்ளான். பாலியல் உணர்வுகளில் சில போது மனைவியால் கணவனை திருப்தி படுத்த முடியாமல் போகலாம். எனவே கணவன் முறையற்ற உடலுறவை நாடி செல்வதை திசை திருப்பவும் பலதார மணம் அனுமதிக்கப் பட்டிருக்கலாம். அல்லாஹ் அறிந்தவனாக உள்ளான்.

### அனுமதியே தவிர கட்டாயமல்ல

நாம் பலதார மணம் குறித்து பேசும் சூரா நிஸாவின் 4வது வசனத்தை ஆழ்ந்து சிந்தித்தால் அவ்வசனத்தில் நீதி செலுத்த முடியும் என்றால் மட்டுமே இரண்டாம் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கட்டளை இட்டிருப்பதை பார்க்கலாம். உண்மையில் இது மிக கடினமான ஒன்று. இஸ்லாம் பொதுவாக மனிதர்களுக்கு மத்தியில் நீதி செலுத்தும் படி கட்டளையிடுவதை ஒரு கூட்டத்தினரின் மீதுள்ள வெறுப்பு உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்து விட வேண்டாம் என்ற திருமறை வசனத்தின் மூலம் விளங்கி கொள்ளலாம். அதிலும் குறிப்பாக உறவுகளுக்கு மத்தியில் நீதி செலுத்தும் படியும் பாரபட்சமின்றியும் இருக்கும் படி சொல்லும் ஏராளமான ஹதீஸ்களை நாம் பார்க்கலாம். உதாரணத்திற்கு குழந்தைகளில் ஒருவருக்கு இனிப்போ அல்லது உடையோ வாங்கி கொடுத்தால் அது போல் பிற குழந்தைகளுக்கும் வாங்கி கொடுக்கும் படி அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) கட்டளையிட்டுள்ளார்கள்.

> *உண்மையில் வரைமுறையின்றி எல்லையில்லாமல் திருமணம் செய்து கொண்டிருந்த சமூகத்தில் ஒரு வரையறையை ஏற்படுத்தியது இஸ்லாமேயல்லாமல் உலகில் உள்ள எந்தமதமும் பலதார மணத்துக்கு வரையறையை ஏற்படுத்தவில்லை.*

### நீதி செலுத்துதல் எளிதான ஒன்று அல்ல

ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகளுக்கு மத்தியில் பாரபட்சமின்றி நடப்பதே மிகவும் கடினமாக இருக்கும் போது இரு வேறு குடும்பங்களிலிருந்து வந்த பெண்களிடத்தில் நீதியாக நடப்பது கடினமானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதிலும் குறிப்பாக இருவரும் வெவ்வேறு குடும்பம் மற்றும் பொருளாதார பிண்ணணியுடன் வரும் போது அதிலும் பெரும்பாலும் முதல் மனைவி 40 வயதுகளில் இருக்கும் போது இன்னொரு மனைவி 20களில் இருக்கும் போது ஏகப்பட்ட பிரச்னைகள் ஏற்படும். அதனால் தான் திருமறையில் சூரா நிஸாவின் 129ம் வசனத்தில் 'நீங்கள் (நீதமாக நடக்க) ஆசை கொண்டாலும் (உங்கள் மனைவியரிடையே) பெண்களிடையே நீங்கள் நீதமாக நடக்க சக்தி பெற மாட்டீர்கள். (ஒரு மனைவியின் பக்கமே) முற்றிலும் சாய்ந்து விடாதீர்கள். (அந்தரத்தில்) தொங்க விடப்பட்டவள் போல் அவளை நீங்கள் விட்டு விடாதீர்கள்' என்று அல்லாஹ் எச்சரிப்பதை காண்கிறோம்.

### இரண்டாம் திருமணம் செய்ய தேவையான தகுதிகள்

குர்ஆன் மற்றும் சுன்னாவின் வெளிச்சத்தில் நாம் ஆராய்ந்து பார்த்தால் இரண்டாம் திருமணம் செய்ய விரும்புபவர்கள் குறைந்த பட்சம் கீழ்காணும் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

1. முதலாவதாக பொருளாதார வசதி இருக்க வேண்டும்
2. அனைவரிடமும் நீதியுடன் நடக்க வேண்டும்.
3. எந்த மனைவியின் பொருட்டு இன்னொரு மனைவிக்கு அநீதி இழைக்க கூடாது
4. பெண்ணின் பாலியல் தேவைகளை நிறைவேற்ற கூடிய உடல் தகுதி.
5. எல்லா மனைவியின் குழந்தைகளையும் சரிசமமாக நடத்த வேண்டும்

### இரண்டாம் திருமணம் – பெண்கள் எதிர்ப்பதேன் ?

இஸ்லாம் அனுமதிக்கும் பலதார மணத்தை முஸ்லீம் பெண்கள் எதிர்ப்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. இரண்டாம் திருமணம் செய்ய தேவையான தகுதிகள் இல்லாதவர்களும் வெறும் மோகம் ஆசையினால் இரண்டாம் திருமணம் செய்வதும் இரண்டாம் திருமணம் செய்வதற்கு இஸ்லாத்தை மேற்கோள் காட்டுவோர் திருமணத்திற்கு பின் செய்ய வேண்டிய கடமைகளில் இஸ்லாத்தை புறக்கணிப்பதும் இரண்டாம் திருமணத்தை பெண்கள் எதிர்ப்பதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

### பெண்களின் இயல்பும் மனோநிலையும்

உலகில் உள்ள எல்லோரின் மனநிலையும் இயல்பும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதை சாதாரண உடை, உணவு விஷயத்திலேயே பார்க்கின்றோம். இன்று தமிழகத்தில் உள்ள முஸ்லீம்கள் எல்லோரும் சில தலைமுறைகளுக்கு முன் வேற்று மார்க்கத்திலிருந்து வந்தவர்களாக தான் இருப்போம். அந்த அடிப்படையில் தமிழ் கலாச்சாரத்தில் பொதுவாக பெண்கள் எதை வேண்டுமானாலும் பங்கிட்டு கொள்வார்களே தவிர கணவனை பங்கிட்டு கொள்ள முன் வர மாட்டார்கள். எப்படி தாய் தன் மகன் திருமணம் முடித்து விட்டால் எங்கே தன்னை நேசித்த மகனின் பாசம் தன்னிடமிருந்து மருமகளிடம் சென்று விடுமோ என்ற அடிப்படையில் மருமகளை

எதிரியாக பாவிக்கிறாளோ அது போல் தன்னுடைய கணவன் வேறு பெண்ணை திருமணம் முடித்தால் தன் மீதான கணவனின் அன்பு திசை மாறி போய் விடும் என்ற பயமும் பெண்கள் ஆண்களின் இரண்டாம் திருமணத்தை எதிர்ப்பதற்கு காரணமாக இருக்கலாம்.

### பெண்களுக்கு தெரியாமல் நடக்கும் ரகசிய திருமணங்கள்

சமீபகாலமாக இரண்டாம் திருமணம் செய்யும் பலர் தற்காலிக பிரச்னைகளை தவிர்க்க தங்கள் மனைவிக்கு தெரியாமலேயே இன்னொரு பெண்ணை திருமணம் செய்கின்றனர். குறிப்பாக அழைப்பு பணியில் ஈடுபடும் பலர் இவ்வாறு செய்வதால் அழைப்பு பணியில் ஈடுபடுவோர்க்கு பெண் கொடுப்பதற்கே யோசிக்கும் நிலையையும் பார்க்கின்றோம். 'உங்கள் மனைவியிடத்தில் சிறந்தவர்களே உங்களில் சிறந்தவர்கள்' எனும் பெருமானாரின் வாக்குக்கு மாறாக போர்களத்தில் கூட மனைவியின் ஆலோசனையை கேட்பதற்கு பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்வில் நமக்கு முன்மாதிரி இருக்கும் போது ஒரு பெண்ணின் வாழ்வில் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் விஷயத்தை பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லாமல் இருப்பது அப்பெண்ணுக்கு கணவனின் மேல் வெறுப்பை தான் ஏற்படுத்தும். தற்காலிக சங்கடங்களுக்கு பயந்து கடைசியில் விஷயம் வெளியே தெரியும் போது அப்பெண்ணுக்கு சமுதாயத்தில் ஏற்படும் அவமானமும், குத்தல் பேச்சுகளும், நையாண்டிகளும் சொல்லி மாளாது. இவ்வளவு முக்கியமான விஷயத்தையே மறைத்த கணவன் இன்னும் எதை எதையெல்லாம் மறைத்திருப்பான் என்ற சந்தேகமும் இரண்டாம் திருமணத்தை பெண்கள் எதிர்க்கும் காரணங்களில் ஒன்றாகும்.

### பெண்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமை

இரண்டாம் திருமணம் செய்யும் பலர் அதற்கு தேவையான பொருளாதார வசதி இல்லாமலேயே திருமணம் செய்வதால் பெண்களின் அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்ற முடியாமல் தவிப்பதை பார்க்கின்றோம். ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில் இரண்டாம் திருமணம் செய்பவர்கள் மனைவியிடம் ஏற்படும் சின்ன சின்ன சண்டைகளுக்கெல்லாம் இரண்டாம் திருமணம் செய்பவர்கள் திருமணம் முடித்தவுடன் பொருளாதார வசதியின்மை காரணமாக இருவரையும் திருப்திபடுத்த முடியாமல் தவிப்பதை பார்க்கின்றோம்.

அதிலும் முதல் மனைவியுடன் குடும்பமாக வாழ வசதியில்லா வளைகுடா மாப்பிள்ளைகள் கூட இரண்டாம் திருமணம் செய்வது இஸ்லாமிய அடிப்படைகளுக்கு முரணானது. குழந்தை இல்லை என்று இரண்டாம் திருமணம் செய்பவர்கள் சில சமயங்களில் அதற்கு காரணமாக தாங்களும் இருக்கலாம் என்பதை மறந்து விடுகின்றனர். சொந்த ஊரை விட்டு வேறு ஊரிலோ அல்லது வேறு நாட்டிலோ வாழ்பவர்கள் மனைவியை வருடத்திற்கு ஒரு முறை பார்ப்பதால் தங்கள் இச்சையை தீர்த்து கொள்வதற்காக போன இடத்தில் திருமணம் செய்பவர்கள் ஏனோ ஊரில் இருக்கும் தன் மனைவிக்கும் அத்தேவை இருக்கும் என்பதை எளிதில் மறந்து விடுகின்றனர். இரண்டாம் திருமணம் செய்வதை மார்க்க கடமையாகவே பர்ளு கிபாயாவாகவே சித்தரிக்கும் நம்மவர்களில் பலர் வசதியின்மையால் சுன்னாவுக்கு மாற்றமாக இரண்டு மனைவிகளையும் ஒரே வீட்டில் வைத்திருப்பவர்களாகவோ அல்லது இரண்டாம் மனைவியை அவளின் தாய் வீட்டிலேயே தங்க வைப்பவர்களாக உள்ளதை பார்க்கின்றோம்.

### குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படல்

ஆண்கள் இரண்டாம் திருமணம் செய்வதால் அதிகம் பாதிக்கப்படுவது எதிர்கால சந்ததியினரான நம் குழந்தை செல்வங்கள் தான் என்றால் அது மிகையானதல்ல. இரண்டாம் திருமணம் செய்தவுடன் தன்னுடைய நேரத்தை இன்னொரு குடும்பத்துக்கும் சேர்த்து செலவிட வேண்டியவனாக இருப்பதால் தந்தையிடமிருந்து அது வரை கிடைத்த பூரண அன்பு குறைந்து விடுவதால் குழந்தைகள் உள ரீதியாக பாதிக்கப்படுகின்றன.

அது மாத்திரமல்லாமல் குழந்தைகள் வயதை ஒத்த சிறுவர்கள் பள்ளிக்கூடத்திலும் தெருவிலும் கேலி, கிண்டல் செய்யும் போதும் மனம் உடைந்து விடுகின்றனர். ஆறுதலுக்கு தாயாரிடம் வரும் போது அவரும் கணவர் மேல் உள்ள கோபத்தை குழந்தையிடம் காட்டும் போது குழந்தைகள் வெகுவாக பாதிக்கப்படுகிறார். இன்றைய போட்டி நிறைந்த சூழலில் சிறுவர்கள் பெற்றோரின் முழு ஆதரவுடன், வழிகாட்டலுடன் மட்டுமே அமைதியான சூழலில் தங்கள் எதிர்காலத்தை நோக்கி சரியான திசையில் செல்ல இயலும். அது போல் மனைவிகள் மத்தியில் காட்டும் பாரபட்சம் குழந்தைகளின் மத்தியில் எதிரொலிப்பதை பார்க்கின்றோம். அது போல் சில சமயங்களில் தன்னுடைய தாயாரின் பிரச்னைகளுக்கு எல்லாம் தன் தந்தையின் இரண்டாம் திருமணமே காரணம் என்று நினைக்கும் குழந்தைகளின் உள்ளத்தில் தந்தை ஒரு வில்லனாக பதிந்து விடுகிறார்.

### முடிவுரை

இஸ்லாம் அனுமதித்துள்ள இரண்டாம் திருமணம் தேவையான சந்தர்ப்பங்களில் அதற்கு தேவையான தகுதியுள்ளவர்களால் தங்கள் மனைவியிடத்தில் பக்குவமாக எடுத்து சொல்லி அவர்களையும் அதற்கேற்ப தயார் செய்திருந்தால் அவர்களே முன் வந்து அதனை ஆதரிப்பார்கள்.

எனவே பெண்களின் இரண்டாம் திருமணத்துக்கான எதிர்ப்புக்கான முக்கிய காரணமாக நாம் அவர்களின் கலாச்சாரம், இயல்பையும், இரண்டாம் திருமணத்தை பெண்களின் மேல் எழும் சிறு பிரச்னைகளுக்கெல்லாம் அவர்களை பிளாக் மெயில் செய்யும் ஒரு ஆயுதமாக கையாளும் ஆண்களையும் இரண்டாம் திருமணம் செய்வதற்கு இஸ்லாத்தை ஆதாரம் காட்டும் ஆண்கள் திருமணம் முடித்தவுடன் அவர்களுக்கு மத்தியில் நீதியின்றி நடப்பதும் குழந்தைகளுக்கு மத்தியில் கூட பாரபட்சம் காட்டுவதுமே முக்கிய காரணங்களாகும். இவை தவிர்க்கப்பட வேண்டுமென்றால் இஸ்லாம் சொல்லுகின்ற தகுதிகள் உள்ளோர் மட்டும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டாம் திருமணம் செய்வதை கொண்டும் அதை கொண்டு முதல் மனைவிக்கு எப்பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதிலும் அதை அவர்களுக்கு புரிய வைப்பதிலுமே உள்ளது. அப்படிப்பட்ட ஓர் சமூகத்தை இம்மண்ணில் அமைக்க அல்லாஹ் உதவி செய்வானாக.

*மனிதனை புனிதனாக்கும்.... முதல் பக்க தொடர்ச்சி...*

எதற்காக வந்தாய்?

பதில்.A. இறைவனது கடமைகளை நிறைவேற்ற. தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ்

B. எனது கடமைகளை நிறைவேற்ற

கண்களுக்கு நேரத்திற்கு தேவையான தூக்கம், ஓய்வை கொடுப்பதைப்போல ஏனய உறுப்புகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்.

C.தாய் தந்தையருக்கு செய்ய வேண்டிய கடமைகள்.

D.தனது கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள்.

E.தனது பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகள்.

F.தனது சகோதரனுக்கு செய்ய வேண்டிய கடமைகள்.

G. தனது அண்டை வீட்டாருக்கு செய்ய வேண்டிய கடமைகள்.

ஆகமொத்தத்தில் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தனது முஸ்லிம் சமூகத்திற்கே தன்னால் இயன்ற உதவி ஒத்தாசைகளைச் செய்ய வேண்டும்.

## எங்கே போகிறாய்?

கொடுக்கல் வாங்கலோ நட்போ இல்லாத அந்த மறுமையை நோக்கி.

எனவே இப்படியான கேள்விகளை அடிக்கடி தனக்குள்ளே கேட்டுக்கொண்டோமேயானால் நமது உள்ளம் முதலில் தூய்மை அடையும். பின்னர் நம்மீதே நமக்கு காதல் ஏற்படும். மேலும் தனக்குத்தானே கடிதம் எழுதப்பழகிக்கொள்ள வேண்டும். அன்றாடம் தூங்க செல்லும்போது நாம் செய்த பேசிய நல்லவை, கெட்டவைகளை குறித்து கொள்ள வேண்டும்.

இவ்வாறாக அடிக்கடி எழுதிக் கொள்ளும் போது இடையில் மாதாந்தப் பரீட்சை வைப்பதைப் போல் அந்த நல்லதையும் கெட்டதையும் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். இந்தமாதிரி செய்து வரும் போது காலப் போக்கில் எம்மிலுள்ள குறைகளை நாம் களைந்து விடலாம். பின்னர் நாம் ஒருவாறு புனிதமானவனே என எமதுள்ளமே சாட்சி சொல்லத் தொடங்கும்.

இந்த வகையில் நாம் பிறருக்கு ஒரு நல்ல விஷயத்தைச் சொல்வதாக இருந்தாலும் முதலில் நாம் நம் உள்ளத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும் இது பற்றி அல்லாஹ் திருமறையில் குறிப்பிடுகையில்

நீங்கள் வேதத்தைப் படித்துக் கொண்டே உங்களை மறந்து விட்டு (பிற) மனிதர்களுக்கு நன்மையை ஏவுகின்றீர்களா? (2:44) மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறியதாவது இறைவன் உங்கள் உருவங்களையோ உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை மாறாக உங்கள் உள்ளங்களையும் செயல்களையும்தான் பார்க்கிறான்.

## அல்லாஹ்வையும், நபி(ஸல்) அவர்களையும் காதலிக்க வேண்டும்.

நாம் அடுத்தபடியாக அல்லாஹ்வின் மீதும் நபி (ஸல்) அவர்கள் மீதும் அசையாத அன்பு வைக்க வேண்டும் ஆசை வைக்க வேண்டும். அத்துடன் தன்னம்பிக்கையும் உறுதியும் எம்மில் ஏற்பட வேண்டும். நாம் ஒரு செயலைச் செய்வதாக இருந்தால் அதை அல்லாஹ்விற்காக வேண்டியும், நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த வழிமுறைப் பிரகாரமும் செய்தால்தான் அது அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்ஷாஅல்லாஹ் கூலியும் கிடைக்கும்.

உன் உள்ளத்தில் எவருக்கும் தீங்கு நாடாமல் உன்னால் வாழ முடியுமென்றால் அவ்விதமே நீ வாழ். இதுதான் என் சுன்னத்தாகும். ஒரு மனிதனின் நாட்டமும் இதயத் தேட்டமும் நான் கொண்டு வந்துள்ள (இறைவேதமாம் குர்ஆனுக்கு) உட்பட்டதாய் ஆகாதவரை அவர் நிறைவான இறை நம்பிக்கையாளராக முடியாது. (ஹதீஸ்) எனவே இந்த ஹதீஸின் அடிப்படையை நாம் ஒவ்வொருவரும் நேசிக்க வேண்டும்.

## துன்பத்தைக் காதலிக்க வேண்டும்.

யார் அல்லாஹ்வையும், நபி(ஸல்) அவர்களையும் அதிகம் நேசிக்கின்றார்களோ அவர்களுக்கு பள்ளத்தை நோக்கி வெள்ளம் வருவதைப்போல் சோதனைகள் தேடிவரும்(ஹதீஸ்)

துன்பத்தின் துவக்கத்தில் ஏற்படுவதுதான் பொறுமை (நபிமொழி)

எனவே துன்பம் ஒன்று ஏற்பட்டு விட்டால் துவண்டு விடக்கூடாது. அதை எதிர்கொள்ளக் கூடிய அளவு தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும் இலையுதிர் காலம் என்று எதை நீங்கள் சொல்கின்றீர்களோ அது பூமலர் காலம். எந்தத் துன்பம் வந்தாலும் அதைத் தொடர்ந்து ஒரு இன்பம் காத்துக்கொண்டிக்கிறது. ஒரு மனிதன் வேலைக்குப் போகப் புறப்பட்டுவிட்டார் ஆனால் அவருடைய மோட்டார் சைக்கிள் பழுதடைந்து விட்டது. சரி பரவாயில்லை பஸ்ஸில் போவோம் என்று சொல்லிக்கொண்டு போனார் ஆனால் பஸ்ஸூம் வரவில்லை.

அவருக்கு ஒரு பக்கம் நேரமும் போய்கொண்டிருக்கிறது. கடும் தடுமாற்றத்தில் நின்றுகொண்டிருக்கையில் அவருடைய நண்பனின் கார் வந்தது கடும் சந்தோஷத்தில் ஏறிப் போய்க் கொண்டிருக்கையில் திடீர் என அந்த கார் விபத்தில் மாட்டிக் கொண்டது. கடும் கவலைப்பட்டார் இருப்பினும் எமக்கு சிறிய காயங்கள்தான் ஏற்பட்டிருக்கிறது உயிர் போக வில்லைதானே என்று சந்தோஷப்பட்டார். எனவே எங்களுடைய வாழ்க்கையே ஒரு பயணம் மாதிரித்தான். அதில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் எனவே இன்பத்தை ஏற்றுக் கொள்வதைப்போல துன்பத்தையும் காதலித்துக்கொள்ள வேண்டும். இன்பங்கள், ஆசாபாசங்களால் நரகம் சூழப் பட்டிருக்கின்றது. கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்களால் சுவர்க்கம் சூழப்பட்டிருக்கின்றது.(நபிமொழி)

## நேரத்தை காதலிக்க வேண்டும்.

எமக்கு இறைவன் கொடுத்த அனைத்திலும் கூட்டி குறைக்காமல் எல்லோர்க்கும் சமமாகக் கொடுத்தது இந்த நேரம் ஒன்று தான். நேரம் என்பது உயிர் போன்றது போனால் வராது பொண்ணான காலத்தை மன்னாக்கி விடாதே என்பது எல்லாம் பழையக்கதை ஏனென்றால் பொண்ணைக்கூட இழந்துவிட்டால் பணம்

கொடுத்து வாங்கிவிடலாம் ஆனால் எதைக் கொடுத்தும் வாங்க முடியாது எமது குடும்பத்தில் ஒரு உயிர் பிரிந்து விட்டால் நாம் எவ்வளவு கவலைப்படுகிறோம். ஆனால் ஒரு நாளில் இரண்டு மணி நேரம் வீணான முறையில் கழிந்து போனால் அதைப் பற்றி கவலைப்படுவதேயில்லை. இந்த இரண்டு மணி நேரத்தையும் நீங்கள் பிறிதொரு நேரம் பெற்று விடுவீர்களா? என்றால் இல்லவே இல்லை.

ஒரு வருடத்தை வீணாக்கியவன் அருமையை பாடசாலையில் ஒரு வருடம் வகுப்பில் பெயிலானவனின் மூலம் அறியலாம். ஒரு மாதத்தின் அருமையை குறை மாதத்தில் (8மாதம்) பிரசவமான குழந்தை மூலம் அறியலாம். ஒரு நொடியின் அருமையை ஓட்டப் பந்தய வீரனிடம் கேட்டால் அறியலாம்.

எனவே நாங்கள் ஒவ்வொரு நாளும் எமக்குள் ஒரு டைம் டேபிள் போட்டுக் கொண்டு அதன்படி செயல் பட்டால் நிச்சயமாக இந்த நேரத்தையும் நாம் காதலித்து விடலாம். சரி களைப்பாக இருக்கிறது கொஞ்சம் நேரம் சும்மா உட்கார்ந்திருப்போம் என்றிருந்தால் அதிலும் மனதால் ஒரு 10 நிமிடம் அல்லது 15 நிமிடம் ஒதுக்கிக்கொள்ளுங்கள். உங்களின் நேரம் முடிவடைந்ததும் ஒரு நிமிடமும் தாமதிக்காமல் உங்களின் அடுத்த வேலையை ஆரம்பியுங்கள் இப்படி தன்னைத்தானே இது விஷயத்தில் பழக்கப்படுத்திக் கொண்டால் போதும் அல்லாஹ்வின் துணையுடன் உங்களை நீங்களே வென்றுவிடுவீர்கள். எனவே இந்த அருமையான நேரத்தையும் காதலித்து எம்மை புனிதமான மனிதனாக்க முயற்சிப்போமாக.

### தொழுகையை காதலிக்க வேண்டும்.

நாளை மறுமையில் மனிதனிடம் முதலில் கேட்கப்படும் கேள்வி தொழுகை பற்றித்தான் இருக்கும். இத்தொழுகையை முதலில் ஆழமாக உள்ளத்தில் பதியும் வண்ணம் காதலிக்க வேண்டும். அதன் பின்னர் தொழுகைக்குறிய நேரம் வந்ததும் உடனே போய் தொழச்சொல்லி உங்கள் மனமே உங்களை விரட்டியடிக்கும். நீங்கள் எங்கு போனாலும், என்ன செய்தாலும் இறைவனின் துணையுடன் இது விஷயத்தில் பாராமுகமாகவே இருக்க மாட்டீர்கள். அத்துடன் காலப்போக்கில் அதனுடைய சுன்னத் தொழுகைகளையும் சேர்த்துத் தொழுச் சொல்லி அந்த மனமே எம்மைத்தூண்டும். இப்படியாக தொழுகை விஷயத்தில் கடும் ஆசையோடும், ஆர்வத்தோடும் நாம் ஈடுபட வேண்டும்.

ஈமான் கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டார்கள். அவர்கள் எத்தகையவர்கள் என்றால் தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள் (23:12) மேலும் அவர்கள் தம் தொழுகைகளைக் குறித்த காலத்தில் முறையோடு பேணுவார்கள்.(23:9)

இன்னும் கவனமற்ற தொழுகையாளிகளுக்கு கேடுதான் அவர்கள் எத்தகையவர்கள் என்றால் தம் தொழுகையில் பாராமுகமாகவும், அசிரத்தையாகவும் இருப்பார்கள். அவர்கள் பிறருக்கு காண்பிக்கவேதான் தொழுகிறார்கள்.(107:4.5.6)

இந்த திருவசனங்களை படிக்கும் போதே எமது உள்ளம் பூரிப்படைகிறது. ஏன் நிச்சயம் எமக்கு வெற்றி உண்டு இதே போல் கவனமற்ற தொழுகையாளர்களும் நல்ல முறையில் தொழுகையை காதலித்து அதன்பின் நல்ல கவணத்துடன் தொழ முயற்சிக்க வேண்டும்.

### இம்மையை காதலிக்க வேண்டும்.

இம்மை, மறுமையின் விளைநிலம் என்பதற்கொப்ப இம்மையைக் காதலிக்க வேண்டும். ஆனால் சில மனிதர்கள் இம்மையை நேசிப்பதும் இல்லை மறுமையை சிந்திப்பதுமில்லை இம்மையிலே ஒரு நடைப்பிணமாகவே தமது வாழ்க்கையைக் கடத்திச் செல்கிறார்கள். இது என்ன வாழ்க்கை என்று சலித்துப் பேசுவார்கள். அப்படி இருக்க கூடாது. எதிலும் ஒரு விருப்பம் காட்ட வேண்டும்.

இந்த இம்மையில் மறுமைக்குத் தேவையான அனைத்தையும் அப்படியே அள்ளி எடுத்துவிட வேண்டும். இந்த உலகத்தை அல்லாஹ் எங்களுக்கு சோதனைக்களமாக வெறுமனே தரவில்லை மாறாக அனைத்துப் பொக்கிஷங்களையும் சேர்த்துத்தான் தந்திருக்கிறான். அல்ஹம்துலில்லாஹ். இந்த வகையில் இஸ்லாம் சொல்லிக் கொடுத்த பிரகாரம் நல்லதை எடுத்து கொண்டு கெட்டதை விட்டுவிட வேண்டும். அன்னப்பறவை கூட பாலையும் தண்ணீரையும் சேர்த்து வைத்தால் பாலை மட்டும் உறுஞ்சிக் குடிக்குமாம். சுப்ஹானல்லாஹ் இந்த அற்ப ஐந்தறிவுள்ள பறவையே இப்படியென்றால் ஏன் ஆறறிவுள்ள மனிதனால் அப்படி செய்து கொள்ள முடியாது. ஆக குர்ஆனையும் ஹதீதையும் எங்களின் ஆதாரங்களாக வைத்துக்கொண்டு இம்மையில் நல்ல விஷயங்கள் அனைத்தையும் காதலித்து புனிதமான மனிதனாக நாம் மாறவேண்டும்.

### மரணத்தையும் மறுமையும் காதலிக்க வேண்டும்.

மரணம் இவ்வுலகில் உயிருள்ளோரின் இறுதிக் கட்டமாகும். அல்லாஹ் கூறுகிறான். ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும் (3:185)

பூமி மீதுள்ள எல்லோரும் அழிந்து போக்கூடியவர்களே.(55:26)

மரணம் என்பது சந்தேகத்திற்கு வழியில்லாத உறுதியான விஷயமாகும். இவ்வாறிருந்தும் மனிதர்களில் பெரும்பாலானோர் இதை மறந்திருக்கின்றனர். இரும்பு நீரினால் துருப்பிடிப்பதைப்போல் உள்ளமும் துருப்பிடிக்கிறது. உள்ளத்திலுள்ள துருவை நீக்கவல்லது மனிதன் மரணத்தை அதிகம் நினைப்பதும். திருக்குர்ஆனை ஓதுவதுமாகும் (நபிமொழி)

இதன் பிரகாரம் ஒவ்வொரு மனிதனும் ஒரு நாளைக்கு 40 தடவை மரணத்தை நினைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அதில் ஆசை வைத்து வரவிருக்கும் மறுமைக்காக இவ்வுலகில் நற்செயல்களைச் செய்து தயாராகிக் கொள்வது அவசியமாகும்.

அல்லாஹ் இவ்வுலகத்தை நிரந்தரமாக இருப்பதற்காக படைக்க வில்லை மாறாக அதற்கென முடிவு நாள் வரும். அந்தநாளே மறுமை ஏற்படக்கூடிய நாளாகும். அல்லாஹ் கூறுகிறான் நிச்சயமாக இறுதிநாள் வந்தேதீரும் அதில் சந்தேகமில்லை.(40:59)

இந்நாள் சமீபமானதே இறுதி நாள்

நெருங்கிவிட்டது. (54:1) எவன் தன் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு மரணத்திற்குப் பின் வரவிருக்கும் வாழ்க்கையை அழகுபடுத்துவதில் ஈடுபட்டானோ அவனே புத்திசாலியாவான்.(நபிமொழி)

எப்போதும் மறுமையில் பயனளிக்கும் விஷயத்தையே ஆசைப்படுங்கள். (ஹதீஸ்)

இதயங்களும் பார்வையும் கலங்கித் தடுமாற்றமடையும் அந்த இறுதி நாளை அஞ்சிக் கொள்ளுங்கள். எனவே இந்த மரணத்தையும் மறுமையையும் காதலித்தவன் எந்த அச்சமுமடையாமல் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பான். எனவே அவன்தான் புனிதமான மனிதன்.

இப்படி எல்லா விஷயத்திலும் அன்பு, கருணை, பாசம், பற்று உறுதியான தன்னம்பிக்கை போன்றவற்றுடன் செயல்படும்போது அது காதலாக உருவெடுத்து எங்களது வாழ்கையில் எந்த வெறுப்பிற்கும் இடம்வைக்காமல் இறுதி மூச்சு வரை சுவர்க்கமே எங்களின் நிரந்தரமான இடம் என்று நினைத்துக்கொண்டு ஆசையோடும், எதிர்பார்ப்போடும் வாழ எங்கள் அனைவருக்கும் அந்த வல்ல நாயன் துணைபுரிய வேண்டும். மனிதனைப் புனிதனாக்கியது காதலா? பதில் உங்களிடம்.

# நபி மூஸா(அலை) அவர்களும் ஆஷுரா நோன்பும் (பாகம்-2)

*மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A*

மூஸா(அலை) அவர்களின் வாலிப பருவத்தில் மிகவும் மோசமான ஒரு சம்பவம் நடக்கின்றது நடு உச்சி வெயில் சுட்டெறிக்கும் வேளை ஆள் நடமாட்டம் ஏதும் தென்பட வில்லை அவ்வேளையில் மூஸா(அலை) அவர்கள் தெரு வழியாக நடந்து செல்கிறார்கள். அப்பொழுது கிப்தி கூட்டத்தை சேர்ந்த ஒருவனும் பனுஇஸ்ராயீரலில் ஒருவரும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர் மூஸா(அலை) அவர்களைக் கண்டதும், பனுஇஸ்ராயீலர் என்னை இவன்(கிப்தியர்)வம்பு செய்து சண்டை புறிகின்றான் நீங்கள் எனக்கு உதவி செய்யுங்கள் என்று மூஸா (அலை) அவர்களை உதவிக்கு அழைக்கின்றான்.

அவ்வுதவியை ஏற்று மூஸா(அலை) அவர்களும் சென்று சண்டையை சமாதானம் செய்ய முயற்சி செய்கிறார்கள். எச்சமாதானம் செய்தும் பயனளிக்க வில்லை. இதனால் கோபமுற்ற மூஸா(அலை) அவர்கள் கிப்தியரை நோக்கி ஓங்கி அடித்து விடுகிறார்கள் உடனே அவன் மூச்சையாகி இறந்துவிடுகின்றான். இதைக்கண்ட மூஸா(அலை) இது ஷைத்தானின் செயலாயிற்றே ஷைத்தான் எம்மை வழி கெடுக்கும் எதிரியல்லவா நம்மை வழிகெடுத்து விட்டானே என்று மிகவும் மனம் வருந்தி அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டார்கள்.

கிப்தியர் கொலை செய்யப்பட்ட செய்தி அறிந்து ஊர் முழுவதுமாக பரபரப்பாக உள்ளது, என்ன நடக்குமோ என்று பயந்தவாறு அடுத்த நாள் பொழுதில் தெரு ஓரமாக நடந்து சென்றார்கள் அப்பொழுது நேற்று சண்டையிட்டுக் கொண்டிருந்த பனுஇஸ்ராயீலர் இன்று வெறொரு கிப்தியருடன். சண்டையிட்டுக் கொண்டிருந்தான் அப்பொழுது மூஸா (அலை) அவர்கள் அவ்விருவரையும் நோக்கி வேகமாக சென்றார்கள் அதைக் கண்ட பனுஇஸ்ராயீலர் நேற்று அவனைக் கொன்றது போன்று என்னை கொன்று விடாதே என்று கூறுகிறான் இதைக் கேட்ட கிப்தி மக்களுக்கு நேற்று கொலை செய்தது யார் என்று தெரியவர மூஸா(அலை) அவர்களை கொலை செய்ய முடிவு செய்கிறார்கள். பிறகு அங்கிருந்து தப்பித்து வெகு தொலைவில் வசிக்கும் மதியன் வாசிகளிடம் வருகிறார் மூஸா(அலை) அவர்கள்

(ஒரு நாள் மூஸா) மக்கள் அயர்ந்து (தூக்கத்தில் பராமுகமாக) இருந்த போது, நகரத்தில் நுழைந்தார் அங்கு இருண்டு மனிதர்கள் சண்டையிட்டுக் கொண்டியிருந்ததைக் கண்டார் ஒருவன் அவர் கூட்டத்தைச் சேர்ந்தவன் மற்றொருவன் அவர் பகைவன் கூட்டத்தைச் சேர்ந்தவன் பகைவனுக்கெதிராக உதவி செய்யுமாறு அவர் கூட்டத்தான் கோரினான் மூஸா அ(ப் பகை)வனை ஒரு குத்துக் குத்தினார் அவனை முடித்தார் (இதைக் கண்ட மூஸா) இது ஷைத்தானுடைய வேலை நிச்சயமாக அவன் வழி கெடுக்கக்கூடிய பகிரங்கமான விரோதியாவான்" என்று கூறினார்.

என் இறைவா! நிச்சயமாக நான் என் ஆத்மாவுக்கே அநியாயம் செய்து விட்டேன் ஆகவே நீ என்னை மன்னிப்பாயாக! என்று பிரார்த்தித்தார் அப்போது அவன் அவரை மன்னித்தான் நிச்சயமாக அவன், மிகவும் மன்னிப்பவனாகவும் கிருபை மிக்கவனாகவும் இருக்கின்றான்.

"என் இறைவா! என் மீது நீ அருள்புரிந்ததன் காரணமாக, நான் இனி ஒரு போதும் குற்றவாளிகளுக்கு உதவி செய்பவனாக இருக்க மாட்டேன்" என்று கூறினார்.

மேலும், (தமக்கு என்ன நடக்குமோ என்று மறுநாள்) காலையில் பயத்துடன் கவனித்துக் கொண்டு நகரத்தில் இருந்தபோது, முன் தினம் அவரிடம் உதவி கோரியவன் (மீண்டும்) அவரை (உதவிக்காக) கூச்சலிட்டு அழைத்தான் அதற்கு, மூஸா "நிச்சயமாக நீ பகிரங்கமான கலகக்காரனாக இருக்கிறாய்' என்று அவனிடம் கூறினார்.

பின்னர் மூஸா தம்மிருவருக்கும் பகைவனாக இருந்தவனைப் பிடிக்க நாடியபோது அவர் இனத்தான் (தன்னையே அவர் பிடிக்க) வருகிறார் என்று எண்ணி) "மூஸாவே! நேற்று ஒரு மனிதனை நீர் கொலை செய்தது போல் என்னையும் கொலை செய்ய நாடுகிறீரா? இப்பூமியில் அக்கிரமம் செய்பவராகவே இருக்க நீர் நாடுகிறீர் மேலும் இணக்கம் ஏற்படுத்துவோரில் (ஒருவராக) இருக்க நீர் நாடவில்லை" என்று கூறினான்.

பின்னர் நகரத்தின் ஒரு கோடியிலிருந்து (நன்) மனிதர் ஒருவர் ஓடி வந்து மூஸாவே! நிச்சயமாக (இந்நகர்ப்) பிரமுகர்கள் ஒன்று கூடி உம்மைக் கொன்று விட வேண்டுமென ஆலோசனை செய்கிறார்கள் ஆகவே நீர் (இங்கிருந்து) வெளியேறி விடுவீராக நிச்சயமாக நான் உம் நன்மையை

*தொடர்ச்சி 17 ம் பக்கம் பார்க்க ...*

بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

## கல்வி சிறப்பிதழ் இலவச இனைப்பு — 8 பக்கங்கள்

# எங்கு படிக்கலாம் என்ன படிக்கலாம்

- *தொகுப்பு சாதாத்துல்லா*

10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்வு எழுதி கொண்டிருக்கும் அல்லது எழுதி முடித்திருக்கும் மாணவ – மாணவியர்களின் ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் உள்ள மிக பெரிய கவலையாக இருப்பது என்னவெனில், அடுத்ததாக நமது பிள்ளைகளை என்ன படிக்க வைப்பது? எங்கு படிக்க வைப்பது? எங்கு, என்ன படித்தால் அவர்களது எதிர்காலம், பிற்காலம் சந்தோஷமாக அமையும் என்ற கவலை தானாக வந்து விடுவது இயற்கையே.

தற்பொழுது படிப்பின் மீதான தாகம் வளர்ந்துள்ளது, ஆர்வம் பெருகியுள்ளது கல்வியறிவு இல்லையேல் எதிர்காலம் இல்லை எனும் ஆக்கப்பூர்வமான சிந்தனை இளைய தலைமுறையின் இதயத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. நமது சமுதாய பெற்றோர்களிடத்தில் குழந்தைகளின் அறிவை மேம்படுத்த, சிந்தனையை வளர்க்க ஆர்வமிருந்தும் அனைத்து வசதிகளும் இருந்தும் பெரும்பாலான பெற்றோர்களுக்கு எங்கு, என்ன படிக்க வைப்பது என்ற போதிய விளக்கம் இல்லை, இந்த குறையை போக்க நம் வாசகர்களுக்கு நமக்கு தெரிந்த சிலவற்றை கொடுப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

# பி.இ. படிக்கும் செலவிலேயே எம்.பி.பி.எஸ்

மருத்துவப் படிப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் உள்ள இந்தக் காலகட்டத்தில் நன்கொடை இல்லாமல் பன்னாட்டு மருத்துவப் பல்கலைக்கழகமான ஏரவான் ஸ்டேட் மெடிக்கல் யுனிவர்சிட்டியில் மருத்துவம் படிக்கலாம் என்கிறார்கள், தைசீர் கன்சல்டன்ட் (Tayser Consultants (P) Ltd.) நிறுவனத்தினர்.

ஆர்மீனியா நாட்டைச் சேர்ந்த இந்த மருத்துவப் பல்கலைக்கழகம் பன்னாட்டு மாணவ மாணவிகளை மருத்துவத் துறையில் ஒளிரச் செய்கிற பெருமையுடையது. உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து மாணவர்கள் மருத்துவம் பயின்று செல்கிறார்கள். சர்வதேச தரம் வாய்ந்த இந்தப் பல்கலைக் கழகம் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ஆர்மீனியா நாட்டின் தலைநகரமான ஏரவானில் இயங்கி வருகிறது. இங்கிலாந்து, ஜோர்டான், ஏமன், சிரியா, சூடான், இராக், இரான், ரஷ்யா, கனடா, ஃபிரான்ஸ், பிரேசில், துருக்கி, அமெரிக்கா, எகிப்து, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து மாணவ மாணவியர் வந்து தங்கி படிக்கின்றனர். இந்தப் பலக்கலைக்கழகம் 1919-இல் தொடங்கப்பட்டது. ஆர்மீனியா இந்தியாவின் நட்பு நாடாகவும் இருப்பது இந்தப் பல்கலைக்கழகத்தின் மற்றொரு சிறப்பாகக் கருதப்படுகிறது.

இந்த மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு தகுதியாக பிளஸ் டூவில் உயிரியல், இயற்பியல், வேதியியல் (P.C.B) ஆகிய பாடங்களில் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருந்தால் போதும். நன்கொடை வசூலிக்கப்பட மாட்டாது. உலக சுகாதாரா நிறுவனம் (W.H.O) இந்திய மருத்துவ கவுன்சிலின் (M.C.I.) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றது. கல்விக்கான ஆண்டுக் கட்டணம் ரூ.1,50.000 மட்டுமே. மாணவர்களுக்குரிய மிகுந்த பாதுகாப்பு (High Security), இலவச மின்சாரம், சலவை வசதி, கம்ப்யூட்டர் வசதி, காலை உணவு வசதியுடன் கூடிய விடுதிக்கு கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ 25,000 மட்டுமே முதல் ஆண்டு மட்டும் அட்மிஷன் பீஸ் ரூ 1,25.000.

அமெரிக்காவில் உள்ள போஸ்டன் யுனிவர்சிட்டியுடன் இந்தப் பல்கலைக் கழகம் தொடர்பு கொண்டிருப்பதால் இங்கு பயிலும் மாணவர்கள் ஆண்டு விடுமுறைகளில் அமெரிக்காவுக்கு சுலபமாக விசா பெற்றுச் சென்று டிப்ளமோ படிப்புகளைப் படிக்கலாம். அல்லது அமெரிக்காவைச் சுற்றிப் பார்த்து வரலாம். அல்லது இரண்டு மாதங்கள் வேலை செய்து வந்தால் அந்த வருமானத்தைக் கொண்டே அடுத்த கல்வியாண்டு செலவுகளை சமாளித்து விட முடியுமாம்.

இதில் படித்த தமிழக மாணவர்கள் Screen Test-இல் சுலபமாக தேர்ச்சி பெற்று Intermship முடித்து இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வேலை செய்கிறார்கள்.

கடந்த ஆண்டுகளில் தைசீர் கன்சல்டன்ட் நிறுவனத்தின் மூலமாக தமிழகத்திலிருந்து 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் இப்பல்கலைக்கழகத்தில் M.B.B.S. படிப்பில் அட்மிஷன் பெற்று பயின்று வருகிறார்கள். பிரபலமான மருத்துவர்களின் பிள்ளைகளும் கூட சேர்ந்து உள்ளார்கள். இப்பல்கலைக்கழகத்தில் சேர்த்ததால் பெற்றோர்களும் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த ஆண்டு M.B.B.S. இல் சேர்வதற்கான அட்மிஷன் நடைமுறைகள் துவங்கி விட்டன. மாணவர்களின் வசதிக்காக தைசீர் நிறுவனத்தினர் அட்மிஷன் பெறுதல், இந்தியன் மெடிக்கல் கவுன்சிலின் சான்றிதழ் பெறுதல், விசா, எமிக்ரேஷன் நடைமுறைகள் அனைத்தையும்

செய்து மாணவர்களை வழியனுப்பும் வரை உறுதுணையுடன் இருந்து செயலாற்றுகின்றனர். இந்த வழிகாட்டுதலும் ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மேலும் கூடுதல் தகவல்களுக்கு:

கேப்டன் அமீர் அலீ, S.H.A. நூர்தீன், தைசீர் கன்சல்டன்டஸ் (பி) லிட். ஜியாத் கோர்ட், 241-C ரங்கராஜபுரம் மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை 600024 தொலைப்பேசி 0091 44 2472 2797, 2462 0600, அலைப்பேசி 0091 94443 63043, 94449 40786 மின்னஞ்சல் : tayseerconsultants@gmail.com

# கடல் சார்ந்த படிப்புகள்

கடலின் முக்கியத்துவத்தை உணர்ந்த நம் நாடு இதற்கென்றே ஒரு தனித்துறையை கடல் வளர்ச்சித்துறை என்ற பெயரில் 1981 ஆம் ஆண்டு ஆரம்பித்து விட்டது. கடல் பற்றியும் அதில் மறைந்து கிடக்கும் வளங்கள் பற்றியும் ஆராய்வதுதான் இத்துறையின் நோக்கம். பூமிப்பந்தில் நான்கில் மூன்று பாகம் கடலாகத்தான் இருக்கிறது. இத்துறை தொடர்ந்து வளரக்கூடிய துறை பெரும்பாலும் போட்டிகள் அதிகம் இருக்காது. இத்துறையில் அதிகம் காலூன்ற வேண்டுமெனில் ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்த கல்விமட்டும் போதுமானதாக இருக்காது. அதாவது கணிதம், இயற்பியல், வேதியல், புள்ளியியல், உயிரியல் போன்ற பலதுறை படிப்புகளில் ஆர்வம் இருக்க வேண்டும்.

### எங்கேல்லாம் வேலை கிடைக்கும்?

நம்நாடு ஏற்றுமதியில் கவனம் செலுத்தி வருவதால் பல ஏற்றுமதி நிறுவனங்களுக்குக் கடலியல் வல்லுநர்கள் தேவைப்படுகிறார்கள். பல பொதுப் பணித்துறை நிறுவனங்களில் இத்துறை சார்ந்தவர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள். கல்வித் துறையில் இறங்கலாம். கடல் ஆராய்ச்சியில் ஈடுபடலாம். கடல் தொடர்புடைய பொறியியல் துறையில் இனணந்து கொள்ளலாம். பன்னாட்டு நிறுவனங்களிலும் பணியாற்ற பல வாய்ப்புகள் உள்ளன.

### என்ன படிக்கலாம்?

கடலியலில் பலதுறைகள் உள்ளன. உங்களுக்கு ஆர்வம் அதிகம் உள்ள துறையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். இதோ கடலியலில் உள்ள பல்வேறு துறைகள்.

### Physical Oceanography

இது கடலில் புற இயலைப்பற்றிய படிப்பு. கடல்களின் தன்மை இப்படிப்பில் ஆராயப்படுகிறது.

### Chemical Oceanography

கடலின் வேதிப்பண்புகள் பற்றிய படிப்பு. கடல் நீரில் என்னென்ன பொருள்கள் கலந்திருக்கின்றன. எந்தப் பொருளைப் பிரித்தெடுப்பது லாபகரமாக இருக்கும் போன்றவற்றைப் படிப்பது இத்துறை.

### Bio-Oceanography

கடலில் என்னென்ன உயிர்கள் தோன்றி வளர்கின்றன என்பதை ஆராயும் படிப்பு. கடல் உயிரியின் பொருளாதாரத்தை எப்படி பயன்படுத்தலாம் என்று அறிவதே இத்துறையின் நோக்கம்.

### Geological Oceanography

கடலின் மேல் மட்டம் குறித்தும் மேல்மட்டத்திற்கு சற்று கீழ் உள்ளவைகளைப் பற்றியும் ஆராயும் படிப்பு இது. கடல்களின் தரைமட்டத்தில் உள்ள பலவகையான உலோகங்கள், தாதுக்களைப் பற்றியும் இப்படிப்பில் ஆய்வு செய்யப்படுகின்றது.

### எங்கே படிக்கலாம்?

கடல் தொடர்புடைய படிப்புகள் கீழ்கண்ட கல்வி நிறுவனங்களில் படிக்கலாம்.

1. இந்திய தொழில் நுட்பக்கழகம் சென்னை.
2. ஆண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரம்.
3. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். இராஜாமங்களம்.
4. அழகப்பா பல்கலைக்கழகம். காரைக்குடி (தொண்டி)
5. கொச்சி பல்கலைக்கழகம் கொச்சி
6. கோவா பல்கலைக்கழகம் கோவா

இத்துறையில் மேலும் விவரங்களைப் பெற தொடர்பு கொள்ளவும்.

பெருங்கடல் வளர்ச்சி துறை,

சிஜஓ வளாகம்,

போதிசாலை,

புது டெல்லி - 110003

"உங்களில் இறைநம்பிக்கையாளர்களுக்கும், கல்வி கொடுக்கப்பட்டவர்களுக்கும் பல படித்தரங்களை அல்லாஹ் உயர்த்துகிறான். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிபவன்." (திருக்குர்ஆன் 58:11)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதன் மரணமடைந்து விட்டால் மூன்று அமல்களைத் தவிர, மீதமுள்ள அமல்கள் அனைத்தும் அவனை விட்டு துண்டிக்கப்பட்டு விடும் அவை:

1) ஸதகத்துல்-ஜாரியா (நிரந்தரமாக நடைபெறக்கூடிய தர்மம்). 2) பயன் பெறப்படும் கல்வி

2) அவருக்காக துஆச் செய்யும் அவரின் ஸாலிஹான பிள்ளை. (இம்மூன்றின் மூலம் மரணத்திற்குப் பிறகும் அவருக்கு நன்மைகள் வந்து சேர்ந்து கொண்டே இருக்கும்) (முஸ்லிம் : அபூஹுரைரா(ரலி)

"இங்கே வருகை தந்திருப்பவர்கள் (தாம் பெற்ற) கல்வியை வராதவர்களுக்குத் தெரிவித்து விடட்டும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (தம் ஹஜ்ஜின்போது ஆற்றிய உரையில்) கூறினார்கள்" என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்.

# ஆடிட்டர் ஆவது எப்படி?

சமுதாயத்தில் டாக்டர்கள், இன்ஜீனீயர்கள், பேராசிரியர்கள் போன்றவர்களைப்போல அதிக அந்தஸ்து உள்ளவர்களில் ஆடிட்டரும் ஒருவர். இதற்கான படிப்பை சி.ஏ என்று அழைக்கின்றோம்.

### கல்வித்தகுதி

சி.ஏ படிக்க குறைந்த பட்சம் 12ஆம் வகுப்பு படித்திருந்தாலே போதுமானதும் மேலும் இந்தப் படிப்பிற்கு குறைந்த மதிப்பெண் எதுவும் வரையறுக்கப்படவில்லை வயது உச்சவரம்பும் கிடையாது.

### எப்படிப் படிக்கலாம்?

இந்திய சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் நிலையம் நடத்தும் 10 மாத அடிப்படைப் பயிற்சி (ஃபவுன்டேஷன் கோர்ஸ்) வகுப்பில் சேர்ந்து தேர்ச்சி பெற வேண்டும். இந்நிலையம் நடத்தும் அஞ்சல் வழிப்பயிற்சியோ அல்லது இந்நிலையம் அங்கீகரித்துள்ள கல்வி நிறுவனங்களில் நேரடிப் பயிற்சியோ பெற்றால்தான் அடிப்படைத் தேர்வை எழுத முடியும்.

பட்டதாரி மாணவர்கள் சி.ஏ படிப்பில் சேர்ந்தால் அவர்கள் அடிப்படை பயிற்சித் தேர்வை எழுதத் தேவையில்லை அடிப்படைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றதும், சார்ட்டர்ட் அக்கவுண்டண்டிடம் பயிற்சி பெற (Articled Clerk) மாணவர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும். அத்துடன் மூன்று ஆண்டு காலம் பாடப்பயிற்சியும் உதவித் தொகையும் கிடைக்கும்.

முதல் 12 மாத காலத்திற்குப் பிறகு இன்டர்மீடியட் தேர்வுகளையும் இரண்டரை ஆண்டுப் பயிற்சிக்குப் பிறகு இறுதித் தேர்வுகளையும் எழுதலாம். இறுதித்தேர்வு எழுதி பாஸ் செய்து விட்டால் சார்ட்டர்ட் அக்கவுண்டண்டாக் பணியாற்றலாம்.

இப்படிப்பில் சேர்வது எளிது. ஆனால் திறமையும், இடைவிடாத முயற்சியும், கடும் உழைப்பும் இருந்தால் மட்டுமே சி.ஏ படிப்பில் தேர்ச்சி பெற முடியும்.

விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

இந்திய சார்ட்டர்ட்,
அக்கவுண்டண்ட் நிலையம்,
22 உத்தமர் காந்தி சாலை,
நுங்கம் பாக்கம்–சென்னை.

# விரைவான வேலை வாய்ப்புக்கு வெற்றிடக் கல்வி

இது ஒரு ஆச்சரியமான துறை. ஆம் வெற்றிடத்தைப் பற்றி என்ன படிப்பு உள்ளது என்று கேட்கத் தோன்றும். ஆனால் வெற்றிடத் தொழில் நுட்பம் என்பது ஒரு புதுமையான படிப்பு. தற்பொழுதும் எதிர்காலத்திலும் இதற்கு அதிக வாய்ப்புள்ளதைக் கருத்தில் கொண்டு இந்தத் துறையைக் கொண்டு வந்துள்ளார்கள். இன்றைய காலகட்டத்தில் பல பணிகளுக்கு வெற்றிடச் சாதனங்கள் பயன் படுத்தப்படுகின்றன. இது போன்ற சாதனங்கள் அதிகரித்து வரும் அதே வேளையில் இதனைப் பாதுகாத்துப் பராமரிக்க தொழில் நுட்பம் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிக மிகக்குறைவு. அதனால்தான் இது மிகவும் எதிர்காலமுள்ள ஒரு படிப்பாகக் கருதப்படுகிறது. இந்தப் படிப்பிற்கு Vaccum Technology என்று பெயர். இது ஒரு Diploma படிப்பு. இது ஒரு வருட காலம் படிக்க வேண்டும்.

### எந்தத் துறைகளுக்கு இப்படிப்பு உதவும்?

இப்பயிற்சியில் தரப்படும் தொழில்நுட்பம் பல துறைகளிலும் பயன்படுகிறது. மின்னனு சாதனங்கள் தயாரிப்பிலும் உலோகம் கண்ணாடி ஆகியவற்றில் மேல் பூச்சுகளை உருவாக்கவும் இத்தொழில் நுட்பம் பயன்படுகிறது. இந்தத் தொழில் நுட்பம் வாகனத் தடை சாதனங்களிலும் பயன்படுகிறது. வீடுகள், அலுவலகங்களில் இயங்கும் பல பொருள்கள் வந்து விட்டன. இதன் பயன்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க இதன் தொழில் நுட்பம் தெரிந்த வல்லுநர்களுக்கு வாய்ப்பும் அதிகரிக்கும். இது மாதிரியான புதுப்புது துறைகள் ஆரம்பம் ஆகும் போது விரைவில் இவற்றில் சேர்ந்து பயிற்சி பெற்று அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### கல்வித்தகுதி

இக்கல்வியில் சேர விரும்பும் மாணவர்கள் பி.எஸ்.சி பட்டம் பெற்ற மாணவர்களாகவோ டிப்ளமோ முடித்த மாணவர்களாகவோ இருக்க வேண்டும். பட்டப்படிப்பு முடித்தவர்கள் குறைந்த பட்சம் 55 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும. அட்டவணை வகுப்பினருக்கு மதிப்பெண்களில் சலுகை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

### தேர்வு பெறும் முறை

இப்பயிற்சியில் சேர்வதற்கு முதலில் எழுத்துத் தேர்வு நடத்தப்படும். இதில் வெற்றி பெற்ற பிறகு நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். இத்தேர்வுகள் மே மாதம் அல்லது ஜுன் மாதங்களில் நடத்தப்படலாம் இப்படிப்பில் வெளிநாட்டு மாணவர்கள் 4 பேருக்கு இடம் உள்ளது. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு இட ஒதுக்கீட செய்யப்படுகிறது. அட்டவனை இனத்தினருக்கும். இராணுவத்தினரின் குடும்பத்தினருக்கும் 7.5 சதவீத இட ஒதுக்கீட இந்தப் பயிற்சியில் உண்டு. இப்பயிற்சிக்கு ஆண்டுக் கட்டணமாக ரூ.5000 கட்ட வேண்டும்.

### விண்ணப்பிப்பது எப்படி?

ரூபாய் 300க்கு வங்கி வரைவோலை அனுப்பி வைத்து விண்ணப்பத்தை இப்பயிற்சி பற்றிய விளக்கக் குறிப்புகளுடன் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு கேட்கப்படும் தேதிக்குள் கிடைக்கும்படிச் செய்து விட வேண்டும். இது குறித்து மேலும் விளக்கம் பெற :

Sri Venkateswara University
Of Engineering College,
Tirupati - 517502 – Andra pradesh.

# விஷுவல் கம்யூனிகேஷன்

இதைச் சுருக்கமாக விஸ்காம் என்பார்கள். இந்தத் துறையில் படிப்பு முடித்தவர்கள் நெட், வானொலி, சின்னத்திரை என்று பிடித்தமான ஊடகங்களில் அல்லது விளம்பரத் துறையில் வேலை பார்க்கலாம். இத்துறையில் உங்களுக்குத் தேவையானது படிப்பும் நல்ல அனுபவ அறிவும்தான்.

படிக்கும் போதே எந்த மீடியாவுக்குப் போகலாம் என்று நினைக்கிறீர்களோ, அதில் பகுதி நேரமாக வேலை பார்க்கத் தொடங்கி விடுங்கள். அவ்வப்போது பிரபல நிறுவனங்களுடன் இணைந்து ப்ராஜக்ட்டுகள் செய்யலாம்.

மக்களின் உளவியல், என்ன மாதிரியான வார்த்தைகளை எப்படி உச்சரிப்பது, கண்ணுக்கு இனிமையாக எப்படிப் பதிய வைப்பது ஆகியவை பற்றி இப்பயிற்சியில் கற்றுத் தருகிறார்கள்.

**கல்வித் தகுதி**

12ஆம் வகுப்பு முடித்தவர்கள் இந்தத் துறையில் சேரலாம். இருப்பினும் பட்டப்படிப்பு முடித்த பிறகு இத்துறையில பயிற்சி பெற்றால் எளிதாக முன்னேற அதிக வாய்ப்பு உள்ளது.

**வயது வரம்பு**

17 வயது முழுமையாகி இருக்க வேண்டும். சான்றிதழ் படிப்பும் பட்டயப் படிப்பும் முடித்தவர்களுக்கு வயது வரம்பு தளர்த்தப்படுகிறது.

**எங்கே படிக்கலாம்**

தற்பொழுது அதிகமான சுயநிதிக் கல்லூரிகளில் இப்படிப்பைக் கற்றுத்தருகிறார்கள். இருந்தாலும் இந்தத்துறைக்கு தொடர்புடைய செய்முறைத் தேர்வுகளில் பயிற்சி தருகின்ற வசதி பெற்ற கல்லூரியைத் தேர்வு செய்து இப்பாடம் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரிந்து சேர்வது நலம்.

# அரபி மொழி படித்தால் வேலை கிடைக்குமா?

**நீங்கள் நடத்தும் கோர்ஸ் பற்றி கூறுங்கள்.**

நான் இந்த அரபி மொழி பாடத்தை நடத்த வேண்டுமென்பதற்காகவே ரியாத் சென்றேன். 1994இல் 2 மாதத்தில் குர்ஆனைக் கற்போம் என்று ஆரம்பித்தேன். அதில் கலந்துக்கொண்ட மாணவர்கள் மிகச் சரியாக சிறந்த உச்சரிப்புடன் குர்ஆனைக் கற்றனர். அதைத் தொடர்ந்து அவர்களிடம் குர்ஆனை கற்றால்மட்டும் போதாது அரபி மொழியினை முழுமையாக கற்க வேண்டுமென்ற ஆவல் மிளிர்ந்தது. அப்போது அரபி மொழி சார்ந்த புத்தகங்கள் இல்லாத காரணத்தால் ரியாத் சென்று 3 வருடங்கள் இருந்து நானே சுயமாக ஒரு பாடத்திட்டத்தை உருவாக்கினேன். 2000இல் 2 ஆண்டு அரபி மொழிப் பாடத்திட்டத்தை அறிமுகம் செய்தேன். அதில் 6 மாதங்கள் அரபி மொழிப்பயிற்சியும் 18 மாதங்கள் முழுமையான ஷரீஅத்தையும கற்றுக் கொடுத்தேன். இதன்படி 6 ஆண்டுகள் மதரசாவிலிருந்து எதனைக் கற்பார்களோ அதனை 2 ஆண்டுகளில் கற்றுக் கொடுக்கிறேன்.

**இப்போது நீங்கள் நடத்தக்கூடிய வகுப்புகள் எத்தகைய கால அளவைக் கொண்டவை?**

10 மாத கால அளவை கொண்டவை. அதாவது 10 என்றால் வாரத்தில் 3 நாட்களில் தினம் 2 மணி நேரம் மட்டுமே இந்த வகுப்புகள். ஆக ஒட்டுமொத்தமாக 250 மணி நேரம் மட்டுமே வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த கால அளவை இன்னமும் குறைக்கலாம்.

**நீங்கள் எத்தனை இடங்களில் இது போன்ற வகுப்புகள் நடத்துகின்றீர்கள்?**

மொத்தம் மூன்று இடங்களில் இத்தகைய வகுப்புகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு நேரத்தில் நடைபெறுகின்றன.

**பயிற்றுமொழி எது?**

பயிற்று மொழி என்று தனியாக ஒரு மொழியினையும் வைப்பதில்லை. ஏனென்றால் அரபி மொழி அடிப்படையிலேயே வகுப்புகளை நடத்துகின்றேன். அரபிமொழியின் அடிப்படை வார்த்தைகளை மாணவர்களுக்கு மனனம் செய்யக் கற்றுக் கொடுத்து அந்த வார்த்தைகளின் அடிப்படையில் வினாக்களை உருவாக்கி அதற்குச் சரியான பதிலை அவர்களாகவே உருவாக்கும் விதத்தில் பாடத்திட்டத்தை அமைத்திருக்கின்றோம். இலக்கிய வார்த்தைகள் இடம் பெறும் போது மாணவர்களைப் பொறுத்து தமிழ், ஆங்கிலம், உருது ஆகிய மொழியினை இடையிடையே இணைத்துக் கொள்கின்றோம். இதுவும் ஆரம்ப சில காலங்கள் மட்டுமே. மற்றபடி அனைத்தும் முழுமையான அரபி மொழியில் நடத்தப்படுகிறது.

**அயல்மொழி என்றாலே ஆங்கிலம் தான் என்று இருக்கும்போது அரபி மொழியினை கற்பதனால் ஏதேனும் பயன் உண்டா?**

90களில் நீங்கள் சொல்வதைப் போன்று இருந்தது. ஆனால் தமிழகத்தில் 90க்கு பிறகு இஸ்லாமிய இயக்கங்களின் தாக்கம் அதிகரித்தது. முஸ்லிம் இளைஞர்களிடம் குர்ஆனைப் பொருளறிந்து கற்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது. இஸ்லாத்தை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமென்றால் அரபி மொழி அதற்கு ஆணி வேராக இருக்கிறது. இந்த 21ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிற காலத்தில் குர்ஆனையும் ஹதீஸையும் இஸ்லாமியச் சட்டங்களையும் ஷரீஅத்தையும் முழுமையாக அறிய அரபி மொழி கட்டாயமாகிறது.

**அரபி மொழி கற்பது மிகவும் கடினம் என்கிறார்களே சரியா?**

இது முழுக்க முழுக்க தவறான எண்ணமாகும். அரபிமொழி கற்பதற்கு மிக எளிமையானது. நாம் அரபியை 5 வேளைத் தொழுகைகளில் அன்றாடம் கேட்கின்றோம். நமது குழந்தைகளுக்கு சிறு

வயதிலிருந்தே நாம் குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுக்கிறோம். இப்படி இருக்கும் போது அரபிமொழி என்பது மிகவும் எளிமையான மொழியாகும். அரபி மொழி அறிவியல் பூர்வமான மொழியும்கூட.

### அரபிமொழி படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்றனவா?

நிச்சயமாக ஏராளமான வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனென்றால் இன்று உலகில் மூன்றில் ஒரு பகுதி அரபி பேசக்கூடியவர்களின் நாடுகளாக இருக்கின்றன. உங்களுக்கு அரபி தெரிந்தால் இத்தகைய நாடுகளில் உயர்பதவிகளுக்குச் செல்லவும் பணியாற்றவும் வாய்ப்புகள் உள்ளன. இந்தியா போன்ற நாடுகளில் கூட அரபி மொழி கற்றவருக்கு வேலை வாய்ப்பு உள்ளது. சமீப காலமாக முஸ்லிம் தொழிலதிபர்களிடம், அறிஞர்களிடம், இயக்கங்களிடம் கல்வித் தாக்கம் அதிகரித்து இருக்கிறது அல்-பஜ்ர் இன்டர் நேஷனல் ஸ்கூல், டாக்டர் ஜாகிர் நாயக் IRF இன்டர் நேஷனல் ஸ்கூல், ஐ-மேக்ஸ் ஸ்கூல், ஆலிவ் இன்டர் நேஷனல் ஸ்கூல், ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின்குட்வேர்ட் இன்டார் நேஷனல் ஸ்கூல் போன்ற பல கல்விக் கூடங்கள் உதயமாகிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சூழலில் அரபி மொழி கற்றால் ஆசிரியர் பணிக்கு மிகப் பெரிய வாய்ப்புகள் காத்துக் கொண்டிருக்கின்றன.

### இதனால் மாணவர்கள் பயனடைகிறார்களா?

அரபி மொழி கற்றால் மாணவர்களின் வாழ்க்கை பிரகாசிக்கும். அவர்களின் இம்மை வாழ்க்கை மட்டுமன்று மறுமை வாழ்க்கையும் ஒளிமயமாய் இருக்கும் அவர்கள் அரபி மொழி கற்றால் இஸ்லாத்தை முழுமையாக அறிந்து தங்களுடைய வாழ்வைச் செம்மைப்படுத்த மிகவும் உதவும்.

### அரபி மொழிக்கும் மற்ற மொழிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

மிகப் பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன. பல மொழிகள் தோன்றிய காலத்தில் எப்படி இருந்தனவோ அப்படி இன்றில்லை. செம்மொழிகளான ஹீப்ரு சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகள் இன்று வழக்கத்தில் இல்லை. பல மொழிகள் கடந்த 100 ஆண்டுகளில் பல மாறுதலுக்கு உள்ளாகியுள்ளன. அரபி மொழியோ நபிகள் நாயகம்(ஸல்) காலத்தில் எப்படி எழுதப்பட்டு இருந்ததோ அதே போன்றுதான் இன்றும் இருக்கிறது. அதே போன்று அரபி மொழியில் கலப்படம் இல்லை நாம் தமிழில் பேசும் போது அங்கிலத்தையும் கலக்கிறோம் அல்லவா? அரபி மொழி அப்படியி இல்லை. எதனைச் சொன்னாலும் அரபி மொழியில் தான் சொல்லப்படுகிறது. ஆக அரபி மொழியில் எத்தகைய இடைச்செருகலும் ஏற்படாதது அரபி மொழிக்கும் மற்ற மொழிக்கும் உள்ள மிகப் பெரிய வேறுபாடாகும்.

### தமிழ் மொழிக்கும் அரபிக்கும் உள்ள மொழியியல் ரீதியான தொடர்பு குறித்துச் சொல்லுங்கள்?

மிக அழகான கேள்வியைக் கேட்டீர்கள் ஒரு மொழிக்கும் மற்றொரு மொழிக்கும் அடிப்படையில் 3 ஒற்றுமைகள் இருக்கும் 1. ஒலி (Sound) 2. எழுத்து முறை (Writing), 3. மொழியியல் குடும்பம் (Language Relationship) குர்ஸி, மஸ்ஜித், இமாம். இக்ஸான் இத்தகைய வார்த்தைகள் அரபியிலும் உருதுவிலும் ஒரே மாதிரியாக வரும் இவை ஒலியியல் தொடர்பானவை பார்ஸி உருது அரபி இவை மூன்றுக்கும் எழுத்தியல் தொடர்பு இருக்கும் இவற்றிற்கு ஒரே மாதிரியான எழுத்து வடிவம் இருக்கும்.

மொழியியல் குடும்பம் என்பது வேறு. தமிழ் மொழியை திராவிட மொழி என்கிறோம். தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் இவை 4 மொழிகளும் ஒரே குடும்பவியல் மொழிகள். அதே போன்று உருது, பார்ஸி, பஞ்சாபி ஆகியன ஒரே குடும்ப மொழிகள் ஹிந்தி, சம்ஸ்கிருதம், பெங்காலி, மராத்தி ஆகியன ஒரே குடும்ப மொழிகள்.

ஆனால் தமிழக முஸ்லிம்களைப் பொறுத்தவரை அரபி மொழி அவர்களிடம் ஒலியியல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எப்படியென்றால் அவர்கள் சிறுவயதிலிருந்தே குர்ஆனை ஓதுகிறார்கள் தொழுகையில் அரபியைக் கேட்கிறார்கள், ஓதுகிறார்கள் ஒருவருக்கொருவர் சலாம் கூறுகிறார்கள் இன்ஷா அல்லாஹ், மாஷா அல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் இத்தகைய வார்த்தைகள் நாம் அடிக்கடி கூறுவதால் அரபி மொழி ஒலியியல் தொடர்பை ஏற்படுத்துகிறது.

*- சந்திப்பு M. முகம்மது கௌஸ்*

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவுஞானத்தைத் தேடுவதற்காக யார் புறப்படுகிறாரோ அவர் திரும்பி வருகிறவரை அல்லாஹ்வின் பாதையில் ஆகிவிட்டார். (திர்மிதி : அனஸ்(ரலி)

''நீங்கள் தலைவர்களாக்கப்பட்ட பிறகும் மார்க்க விளக்கங்களைப் பெறுங்கள். (ஏனெனில்) நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் தங்களின் முதுமையிலும் கல்வி கற்றுள்ளார்கள்'' என்று நான் (புகாரி) கூறுகிறேன்.

''ஒருவருக்கு அல்லாஹ் ஒரு நன்மையை நாடினால் அவரை (மார்க்கத்தில்) விளக்கமுடையவராக ஆக்கி விடுகிறான்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள்

நிச்சயமாக அல்லாஹ் கல்வியை(த் தன்னுடைய) அடியார்களிடமிருந்து ஒரேயடியாகப் பறித்து விட மாட்டான். ஆயினும் அறிஞர்களைக் கைப்பற்றுவதன் மூலமே அவன் கல்வியைக் கைப்பற்றுவான். கடைசியாக ஓர் அறிஞர் கூட மீதமில்லாமல் ஆக்கிவிட்டதும் மக்கள் அறிவீனர்களைத் தம் தலைவர்களாக்கிக் கொள்வார்கள், அவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு அறிவின்றியே மார்க்கத் தீர்ப்பும் வழங்குவார்கள். (இதன் மூலம்) தாமும் வழி கெட்டு(ப் பிறரையும்) வழி கெடுப்பார்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னி ஆஸ்(ரலி) அறிவித்தார்கள்.

இங்கே வருகை தந்திருப்பவர்கள் (தாம் பெற்ற) கல்வியை வராதவர்களுக்குத் தெரிவித்து விடட்டும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (தம் ஹஜ்ஜின்போது ஆற்றிய உரையில்) கூறினார்கள்'' என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்கள்.

☆ ☆ ☆

# இஸ்லாமிய ஆய்வில் முதுகலைப் பட்டம்

சென்னைப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள JBAS இஸ்லாமிய ஆய்வகம் 2009 - 2010 ஆண்டுக்கான முதுகலை இஸ்லாமிய ஆய்வுப்படிப்புக்கான (M.A. in Islamic studies) விண்ணப்பங்களை வரவேற்கிறது.

தமிழ்நாட்டில் முதன் முதலாக இத்தகையப் படிப்பு அறிமுகப் படுத்தப்படுகிறது. விருப்பப் பாடத் திட்டத்தின் கீழ் (Choice Based Credit System) நடத்தப்படுகின்ற இந்த முதுகலைப் படிப்பில் திருக்குர்ஆன், நபிமொழி இலக்கியங்கள், இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமியச் சிந்தனைகள், இஸ்லாமியத் தத்துவங்கள், சூஃபியிசம், இஸ்லாமும் பாலியலும், ஓரியண்டலிசம். இஸ்லாமிய இயக்கங்கள் ஆகிய பாடங்கள் இடம் பெற்றுள்ளன.

### சேர்க்கைக்கான தகுதிகள்

ஏதேனும் இளங்கலைக் பட்டப் பிரிவில் வெற்றி பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்குச் சமமான தகுதியுடைய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

### விண்ணப்பங்களை நேரில் பெறும் முறை

விண்ணப்பங்களை ரூ200 செலுத்தி தகவல் மையம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை - 600005 எனும் முகவரியில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம். (தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் 100 செலுத்தினால் போதும். அதற்கு சாதி சான்றிதழின் நகல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.) விண்ணப்பக் கட்டணத்தை வங்கி வரைவோலையாகச் செலுத்த வேண்டும். பதிவாளர் சென்னைப் பல்கலைக் கழகம் சென்னை - 5 என்னும் பெயரில் வரைவோலை எடுக்க வேண்டும்.

### விண்ணப்பங்களை அஞ்சலில் பெறும் முறை

விண்ணப்பப் படிவத்தில் பாடப் பிரிவின் பெயரைக் குறிப்பிட்டு ரூ250 க்கான வங்கி வரைவோலையை இணைத்து அனுப்ப வேண்டும். (தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் 150 செலுத்தினால் போதும். அதற்கு சாதி சான்றிதழின் நகல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.) விண்ணப்பங்களை, சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்தும் பெற்றுக்கொள்ளலாம். இணைய தள முகவரி : WWW.unom.ac.in விண்ணப்பங்களை கையொப்பமிட்ட சான்றிதழ் நகல்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி :

The Head-in-Charge, JBAS Center for Islamic studies, Marina Campus, University of Madras Chennai i - 600005

மேலும் தகவல் பெற தொடர்பு கொள்ளவும் : அலைப்பேசி: 0091 94447 28338, தொலைப்பேசி: 0091 44 2844 9506

# டிப்ளமோ இன் சேஃப்டி இன்ஜினியர்

முஸ்லிம் மாணவர்களில் பெரும்பாலோர் பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரெண்டாம் வகுப்புடன் தங்கள் படிப்பை நிறுத்திக் கொள்கின்றனர். அதற்குப் பல காரணங்கள்.

சிலருக்கு சரியான வழிகாட்டல் கிடைப்பதில்லை. இன்னும் சிலருக்கு கல்லூரியில் சேர்ந்து படிக்கும் அளவுக்குப் பொருளாதார வசதி இருப்பதில்லை. இன்னும் சிலர் குடும்பசூழல் காரணமாக வேலைக்குச் செல்லும் கட்டாயத்தில் இருப்பார்கள். இன்னும் சிலர் வெளிநாடு சென்று கிடைத்த வேலையில் ஓட்டிக் கொண்டு சிரமத்துடன் காலம் தள்ளுவர். ஏதேனும் தொழில் படிப்பு படித்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும் என்று அங்கே போய் வருந்துவார்கள். இவர்களை தவிர இதர பெரும்பாலான மாணவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் காலத்தைக் கழிக்கின்றனர்.

பத்தாம் வகுப்பு அல்லது பிளஸ் டூ வரை மட்டுமே படித்த மாணவர்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பு காத்திருக்கிறது. அதுதான் டிப்ளமோ இன் சேஃப்டி இன்ஜினியர் எனும் படிப்பு, இந்த படிப்பு ஓராண்டுதான். இதை முடித்தவர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறிப்பாக வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் நிறுவனங்களில் நல்ல சம்பளத்துடன் வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன. பொதுவாக டிப்ளமோ இன் சேஃப்டி இன்ஜினியர் என்று சொன்னாலும் நிர்வாகம், மேலாண்மை என அதிலும் பல படிப்புகள் இருக்கின்றன. எல்லாமே வேலை வாய்ப்பை அள்ளித்தரும் படிப்புகள்.

பத்தாம் வகுப்பு அல்லது பனிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் இந்தத் தொழில் படிப்பில் சேர்ந்து தங்கள் எதிர்காலத்தை ஒளிமயமானதாய் ஆக்கிக் கொள்ளலாம்.

இந்த படிப்பு பற்றி மேலும் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் : NIFE 10 வாசு தெரு கீழ்ப்பாக்கம் சென்னை - 10 தொலைப்பேசி 0091 44 2642 2112, 2642 2113

Aicomas புதிய எண் 55 லஸ் சர்ச் ரோடு ஆர்.ஏ புரம், சென்னை - 600028

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் அறிவு ஞானத்தைத் தேடும் பாதையில் நடக்கிறாரோ அவருக்கு சுவனதத்தின் பாதையை அல்லாஹ் இலகுவாக்குகிறான். நிச்சயமாக கல்வியைத் தேடும் மாணவருக்காக அவரின் செயலைத் திருப்தியடைந்து மலக்குகள் தங்கள் இறக்கைகளை (அவரைக் கண்ணியப்படுத்துவதற்காக) பூமியில் வைக்கின்றனர். தண்ணீரிலுள்ள மீன்கள் உட்பட வானங்கள், பூமியிலுள்ள அனைவரும் அறிஞருக்காக பிழைபொறுப்புத் தேடுகின்றனர். வணக்கசாலியை விட அறிஞரின் சிறப்பு, ஏனைய நட்சத்திரங்களைவிட சந்திரனின் சிறப்பை போன்றாகும். நிச்சயமாக உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள் ஆவர். நபிமார்கள், தங்க நாணயங்களையோ, வெள்ளி நாணயங்களையோ தங்கள் வாரிசுப் பொருளாக விட்டுச் செல்லவில்லை. அவர்கள் வாரிசுப் பொருளாக விட்டுச் சென்றதெல்லாம், அறிவு ஞானத்தைத்தான். யார் அந்த அறிவு ஞானத்தை எடுத்துக் கொள்கிறாரோ அவர் மாபெரும் நற்பங்கை எடுத்துக் கொண்டார். (திர்மிதி: அபுத் தர்தாஹ்(ரலி))

# ஒளிமயமான எதிர்காலத்திற்கு ஏரோநாடிக்கல் இன்ஜினியரிங்

விமான இயக்கம், விமானத்தயாரிப்பு, விமானகருவிகள் தயாரிப்பு, பரிசோதனை விதிமுறைகள், ஏவுகணைகள் தயாரிப்பு, வான் விசையியல் பற்றிய பாடங்கள் ஏரோநாடிக்கல் பொறியியல் படிப்பில் கற்றுத் தரப்படுகின்றன. அண்மைக்காலமாக முஸ்லிம் மாணவர்கள் இப்படிப்பில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

### கல்வித்தகுதி

12ஆம் வகுப்பு முடித்தவர்கள் பொறியியல் டிப்ளமோ முடித்தவர்கள் இப்படிப்பில் சேர தகுதி உடையவர்கள் ஆவர். 12ஆம் வகுப்பில் வேதியியல் இயற்பியல் மற்றும் கணிதம் படித்தவர்களாக இருக்க வேண்டும். மதிப்பெண்கள் 60 விழுக்காடுக்கு அதிகமாக பெற்றிருப்பது அவசியம். ஆங்கில அறிவு அவசியமான ஒன்று என்றாலும் படிப்பில் சேர்ந்த பிறகு வளர்த்துக் கொள்ளலாம்.

### எங்கே படிக்கலாம்?

சென்னையில் படிக்க விரும்புபவர்களுக்கு ஹிந்துஸ்தான் கல்லூரியில் இப்படிப்பு உள்ளது. கோவையில் பூங்கா பொறியியல் கல்லூரியில் இப்படிப்பு உள்ளது. மேலும் சில சுயநிதி பொறியியல் கல்லூரிகளிலும் இப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது.

# மேலை நாடுகளில் எளிதில் நல்ல வேலை பெற நர்ஸிங் ஒன்றே சிறந்த வழி

ஒரு வீட்டில் ஒரு நர்ஸ் இருந்தால் பாதி டாக்டர் இருப்பதற்கு சமம் என்று கூறுகின்றார்கள்.

பொருளியல் ஏற்றத் தாழ்வு நிறைந்த இக்காலத்தில் நர்ஸிங் படித்தால் வெளிநாடுகளில் நல்ல சம்பளம் கிடைக்கும். அது மட்டும் இல்லாமல் மேல் படிப்புகளும்(Ph.d - Nursing) எளிதில் படிக்கலாம். நர்ஸிங் படிப்பதற்கு கட்டணமும் மிகக்குறைவு. ஏராளமான கல்லூரிகளும் உள்ளன.

மேலைநாடுகளில் (Australia, Ireland, UK, US, etc.) நர்சு வேலைக்கு ஆட்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள். வெளிநாடுகளில் 1 மில்லியன் நர்சுகளும், இந்தியாவில் ஆண்டுக்கு 5 லட்சம் நர்சுகளும் தேவைப்படுகிறார்கள் என முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கூறினார்.

### ஆண் நர்சுகள் அதிகம் தேவை :

பொதுவாக பெண்கள் மட்டும்தான் நர்ஸ் படிப்பு படிக்கலாம் என நாம் நினைக்கிறோம். ஆனால் ஆண்களுக்கும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

வெளிநாட்டில் நர்ஸிங் வேலைக்குச் செல்லும் போது ஆண் நர்ஸ் தன் மனைவி, குழந்தைகளையும், பெண் நர்ஸ் தன் கணவன், குழந்தைகளையும் கூட்டிச் செல்லாம். அரபு நாடுகளில் சாதாரண வேலை செய்வதை விட நர்சிங் படித்து விட்டு வேலை செய்வது நல்லது.

### நர்ஸிங் படிக்க என்ன தேவை

+2க்கு பிறகு நமக்கு தெரிந்த IT, Engineering, Medical மட்டும்தான். ஆனால் நர்ஸிங்கில் உள்ள பல நன்மைகள் நமக்குத் தெரிவதில்லை. இன்று உலகம் முழுவதும் நர்சுகள் தேவை அதிகரித்துக் கொண்டே வருவதால் எக்காலத்திலும் நர்ஸிங் தேவை குறையவே குறையாது. அதிக மக்கள் தொகை உள்ள இந்தியா இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக சுகாதாரத் துறையும் நர்ஸிங் கவுன்சிலும் அதிக ஊக்கம் கொடுத்து வருகின்றன. விரைவில் தமிழகத்தில் MGR Medical University, Nursing Job Fair ஒன்றையும் நடத்தவுள்ளது.

டிப்ளோமா படிக்க மூன்றரை வருடமும், டிகிரி படிக்க 4 வருடமும் ஆகிறது. ஆனால் வரும் காலங்களில் டிகிரி படிப்பது விரும்பத்தக்கது. டிப்ளோமா படிக்க பிளஸ் டூ வில் எந்த குரூப்பும் எடுத்து 40 சதவீதம் மார்க் மட்டும் எடுத்திருந்தால் போதும். Degree க்கு Science Group (Physics, Chemistry, Biology) 45% எடுத்திருந்தால் போதும். வயது வரம்பு 17 முதல் 35 வரை.

ஆரம்பத்திலிருந்தே ஆங்கிலம் பேசுவதில் ஈடுபாடும் மேலும் பொறுமையும், மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணமும் வேண்டும். அமெரிக்கா போக IELTS, CGFNS & NCLEX படிக்க வேண்டும்.

### வெளிநாடுகளில நர்சுகள் அதிகம் தேவை :

இன்று அமெரிக்காவில் அதிகமான நர்சுகள் தேவைப்படுகிறார்கள். ஆனால் பொருளாதார சீரழிவுகள் காரணமாக Retrogression என்று தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. கடந்த 2 வருடங்களாக இந்த தடை காரணமாக நர்சுகளின் தேவை 1.2 லட்சமாக உயர்ந்துள்ளது. இந்த வருடம் மட்டும் மேலும் 1.4 லட்சம் நர்சுகள் தேவைப்படுகிறார்கள். இதற்கிடையே மூன்றில் ஒரு பங்கு அமெரிக்க நர்சுகள் ஓய்வு பெறுவதால் நர்சுகள் தேவை மேலும் உச்சகட்டத்தில் உள்ளது.

புதிய அதிபர் ஒபாமா இந்த அவசர நர்சுகள் தேவையை அமெரிக்க மக்களைக் கொண்டே பூர்த்தி செய்யுமாறு யோசனை கூறி உள்ளார். அப்படி என்றாலும் அதற்கு இன்னும் 4 ஆண்டுகள் அமெரிக்கா காத்து இருக்க வேண்டி வரும். ஆனாலும் அமெரிக்கர்கள் நர்ஸிங் தொழிலை அவ்வளவாக விரும்புவதில்லை எனவே, அமெரிக்காவின் இந்தத் தடை ரொம்ப காலம் தாக்குப்பிடிக்க முடியாது என நிபுணர்கள் நம்புகின்றனர். அமெரிக்காவில் நர்சுகளுக்கு குறைந்தபட்சம் ரூ1.8 லட்சம் சம்பளமாக வழங்கப்படுகிறது.

அமெரிக்காவில் IT பணியில் உள்ளவர்கள் கூட 10 ஆண்டுகள் பணிபுரிந்தால்தான் Green Card பெற முடியும். ஆனால் நர்சுகளுக்கு அமெரிக்காவில் கால் வைத்த அன்றே Green Card கோரி

விண்ணப்பிக்கலாம். இந்த மாதிரி வசதிகள் அரபு நாடுகளில் கிடையவே கிடையாது. மேலும் மேலை நாடுகளில் கிடைக்கும் இன்னும் பல வசதிகள் இந்தியாவிலும் அரபுநாடுகளிலும் நினைத்துக்கூட பார்க்க முடியாது.

நர்ஸிங் படிக்க உதவித்தொகையும், கல்விக் கடனும் வழங்கப்படுகிறது. நர்சுகள் டாக்டர்களுக்கு நிகராக நடத்தப்படுகின்றனர்.

மேலும் விவரங்களுக்கு :

ஹஜ்ஜு முஹைதீன் அலைப்பேசி: 0091 944440 89331

இனையதளம் : www.nurseindia.in

info@nurseindia.in, md@greenpro.net.

### கல்வி மறைவதும் அறியாமை வெளிப்படுவதும்

'எனக்குப் பின்னர் வேறு எவரும் உங்களுக்கு அறிவிக்க முடியாத நபிமொழி ஒன்றை (இப்போது) நான் உங்களுக்கு அறிவிக்கப் போகிறேன். 'கல்வி குறைந்து போய் விடுவதும் அறியாமை வெளிப்படுவதும் வெளிப்படையாய் விபச்சாரம் நடப்பதும் ஐம்பது பெண்களுக்கு அவர்களை நிர்வகிக்கும் ஒரே ஆண் என்ற நிலைமை வரும் அளவுக்குப் பெண்கள் மிகுதியாவதும் ஆண்கள் குறைந்து விடுவதும் மறுமை நாளின் சில அடையாளங்களாகும்' என்று இறைத்தூதர்(ஸல்) கூறக் கேட்டிருக்கிறேன்" என அனஸ்(ரலி) அறிவித்தார்கள்.

சிறிதளவேனும் கல்வி இருக்கிறவர் (அதைப் பயன்படுத்தாமல்) தம்மைப் பாழ்படுத்தக் கூடாது" என்று ரபீஆ கூறினார்கள்.

# தேர்வு பயம் தற்கொலை

தற்போது நடைபெற்று கொண்டிருக்கும் தேர்வுகளுக்கு மாணவ- மாணவிகள் தீவிரமாக படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாணவ- மாணவிகளிடம் உள்ள மன அழுத்தத்தை குறைப்பது பற்றி பிரபல மன நல மருத்துவர் பதூர் மொய்தீன் கூறியதாவது:-

மனிதனின் மூளையை இடது, வலது என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த 2 பகுதியிலும் ஹிபோகாம்பஸ் என்ற நினைவுகளை பதிவு செய்யும் பகுதி உள்ளது.

மாணவர்கள் படிக்கும் பாடங்கள் அனைத்தும் இடது மூளையில் பதிவாகும். படம் வரைந்தோ, எழுதியோ படித்தால் 2 மூளையிலும் பதிவாகும் படிக்கும் பாடம் நன்றாக பதிந்துவிடும். வெறுமனே பாடம் படித்தால் வலது மூளையில் எந்த பாடமும் பதிவாகாது. இதனால் அது காலியானதாகவே இருக்கும்.

படம் வரைந்து புரிந்து படிக்கும் மாணவ- மாணவிகள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள்.

தேர்வு சமயத்தில் மாணவர்கள் இரவு முழுவதும் கண்விழித்து படிக்க கூடாது. தேவையான ஓய்வு எடுத்து படிப்பது நல்லது. படித்த விஷயங்கள் மூளையில் நன்றாக பதிவாகும்.

படித்த விஷயத்தை மீண்டும் திரும்பவும் சொல்லி பார்ப்பது நல்லது. அப்போதுதான் படித்த பாடம் மூளையில் நன்றாக பதிவாகும். பெரும்பாலான மாணவர்கள் தொடக்கத்தில் இருந்தே சரியாக படிக்காமல் தேர்வு சமயத்தில் அவசரம் அவசரமாக படிப்பார்கள். இதனால் பாடம் மூளையில் பதிவாகாது.

இப்படிப்பட்ட மாணவர்கள்தான் தேர்வில் வெற்றி பெறுவோமா? மாட்டோமா? என்று குழம்பிய நிலையில் உள்ளனர். இந்த மாணவர்களுக்கு தேர்வு சமயத்தில் மன அழுத்தம் ஏற்படும்.

இதே போல் மாநில, மாவட்ட பள்ளி அளவில் முதலிடம் பிடிக்க வேண்டும் என்று படிக்கும் மாணவ- மாணவிகளுக்கும் அளவுக்கதிகமாக மன அழுத்தம் ஏற்படும்.

இப்படிப்பட்ட மாணவ- மாணவிகளின் பெற்றோர் அவர்களிடம் நீ பர்ஸ்ட் ரேங்க் வராவிட்டால் தொலைத்து விடுவேன். எப்படியாவது படித்து முதலிடத்தைப் பிடி என்று மிரட்டுகிறார்கள்.

இதனால்தான் அந்த மாணவ- மாணவிகளுக்கு தேர்வு எழுதும்போது ஒருவித பய உணர்ச்சி ஏற்பட்டு சரிவர எழுத முடியாமல் போய்விடுகிறது. இதே போல் சுமாராக படிக்கும் மாணவ- மாணவிகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளிடம் நீ தேர்வில் பாஸ் ஆகாவிட்டால் உன்னை வீட்டுக்குள் வரவிடமாட்டேன். நீ பெயிலானால் அக்கம் பக்கத்துல எங்க மானம் போய்டும். ஒழுங்கா படி என்று மிரட்டுவார்கள்.

இதனால் அந்த மாணவர்கள் தேர்வு எழுதும்போது பயத்தில் உறைந்து விடுகிறார்கள். தாங்கள் படித்த ஒரு சில பாடங்களையும் மறந்து தோல்வியைத் தழுவுகிறார்கள்.

இப்படி தேர்வில் தோல்வி அடையும் மாணவர்கள் பெற்றோருக்கு பயந்து தற்கொலை செய்து கொள்கிறார்கள். எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் உன்னால் முடிந்த வரை நன்றாகப்படி, அதற்கேற்றபடி மதிப்பெண் கிடைக்கும்.

உன் திறமைக்கேற்ற வேலை நிச்சயம் கிடைக்கும் என்று பக்குவமாக சொல்ல வேண்டும். தவிர பயம் காட்டக்கூடாது. பெரும்பாலான மாணவர்களின் தற்கொலைக்கு பெற்றோர்களின் மிரட்டல்தான் காரணமாக இருக்கிறது. எந்த மாணவனும் தனது எதிர்காலம் கருதி தற்கொலை செய்வதில்லை.

ஒவ்வொரு மாணவனிடமும் ஒவ்வொரு திறமை இருக்கிறது. அதை கண்டு பிடித்து அவனது எதிர்காலத்தை பிரகாசப் படுத்துவது பெற்றோர்களின் கடமையாகும். கல்வி விஷயத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பக்குவத்துடன் வளர்த்தால் தற்கொலையை தடுக்கலாம்.

இவ்வாறு மனநல மருத்துவர் பதூர் மொய்தீன் கூறினார்.

*நன்றி மாலைமலர் மார்ச் 12. 2010*

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 20)

*- டாக்டர் ஷேக் சையது M.D.*

விந்தணு மரபணுத் தொகுப்பும், சினை முட்டை மரபணுத் தொகுப்பும் இரண்டற இணையும் போது இவற்றில் எதன் விகிதம் மிகைத்து நிற்கிறதோ அது தான் குழந்தையின் சாயலை உருவாக்குவதில் ஆதிக்கம் செலுத்துகிறதே தவிர, ஒன்றையொன்று முந்துவதால் அல்ல என்ற அறிவியல் உண்மையை முந்திய தொடரில் அறிந்து கொண்டோம்.

கருயியல் பற்றி ஏற்கனவே கூறப்பட்ட நபி மொழியில் விந்தணு, சினை முட்டை இவற்றில் எது முந்துகிறதோ அதுவே குழந்தையின் சாயலைத் தீர்மானிப்பதில் ஆதிக்கம் செலுத்துகிறது என்று இடம் பெற்றுள்ளதே என்று சிலருக்கு சந்தேகம் ஏற்படலாம். அதற்கான விளக்கம் என்ன என்பதை இத்தொடரில் அறிந்து கொள்வோம்.

ஏற்கனவே கூறப்பட்ட நபிமொழியில் முந்துதல் எனும் அர்த்தத்தைக் குறிப்பிட கையாளப்பட்ட வார்த்தையை நினைவு கூரும் பொருட்டு மீண்டும் சுருக்கமாக அதனை இங்கே தருகிறேன்.

وَأَمَّا الشَّبَهُ فِى الْوَلَدِ فَإِنَّ الرَّجُلَ إِذَا غَشِىَ الْمَرْأَةَ فَسَبَقَهَا مَاؤُهُ كَانَ الشَّبَهُ لَهُ ، وَإِذَا سَبَقَ مَاؤُهَا كَانَ الشَّبَهُ لَهَا.

குழந்தையிடம் காணப்படும் (தந்தையின் அல்லது தாயின்) சாயலுக்குக் காரணம், ஆண், மனைவியுடன் உடலுறவு கொள்ளும் போது அவனது நீர் (விந் தணு) முந்திக் கொண்டால் குழந்தை அவனது சாயலை ஒத்திருக்கிறது. பெண்ணின் நீர் (சினை முட்டை) முந்திக் கொண்டால் குழந்தை அவளது (சகோதரர்களின்) சாயலை ஒத்திருக்கிறது. என்பது நபி மொழி.

இந்த நபிமொழியில் முந்துதல் என்பதைக் குறிப்பிட சபக் எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை முந்துதல் எனும் அர்த்தத்தில் பயன் படுத்தப்படுவது போலவே மிகைத்தல், மேலோங்குதல், என்ற அர்த்தங்களிலும் பயன்படுத்தப்படும்.

மேற் கூறப்பட்ட நபிமொழியில் இடம் பெற்றுள்ள சபக் என்ற வார்த்தை மிகைத்தல், மேலோங்குதல் என்ற அர்த்தத்தில்தான் இந்த இடத்தில் கையாளப் பட்டிருக்கிறது என்பதை முஸ்லிம் கிரந்தத்தில் இடம் பெற்றுள்ள வேறு இரு நபிமொழிகள் மூலம் உறுதி படுத்திக் கொள்ள முடிகிறது.

அந்த இரு நபிமொழிகளையும் இதோ உங்களது கவனத்திற்கு முன் வைக்கிறேன்.

عن عائشة رضي الله عنها أن امرأة قالت لرسول الله صلى الله عليه وسلم هل تغتسل المرأة إذا احتلمت وأبصرت الماء فقال نعم فقالت لها عائشة تربت يداك وألت قالت فقال رسول الله صلى الله عليه وسلم دعيها وهل يكون الشبه إلا من قبل ذلك إذا علا ماؤها ماء الرجل أشبه الولد أخواله وإذا علا ماء الرجل ماءها أشبه أعمامه رواه مسلم

அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒரு பெண்மணி அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களிடம் வந்து, ஒரு பெண்ணுக்குத் தூக்கத்தில் ஸ்கலிதம் ஏற்பட்டு தம்மீது (மதன) நீரைக் கண்டால் அவள் மீது குளியல் கடமையாகுமா? என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ஆம் என பதிலளித்தார்கள்.

அப்போது நான் அந்தப் பெண்ணிடம், உன் கரம் மண்ணைக் கவ்வட்டும், காயமடையட்டும் என்று கூறினேன். அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள், அவரை விட்டுவிடு! (என்று கூறி விட்டு, தாயுக்கும் சேயுக்குமிடையே) இதை முன்னிட்டுத்தானே உருவ ஒற்றுமையே (சாயல்) ஏற்படுகிறது! பெண்ணுடைய நீர் (சினை முட்டை) ஆணுடைய நீரை (விந்தணுவை) விட மேலோங்கி விட்டால் குழந்தை தன் தாயின் சகோதரர்களது (மாமன்) சாயலில் பிறக்கிறது. ஆணுடைய நீர் பெண்ணுடைய நீரைவிட மேலோங்கி விட்டால் அது தன் தந்தையின் சகோதரர்களது (பெரியப்பன், சிற்றப்பன்) சாயலில் பிறக்கிறது என்று கூறினார்கள். நூல்: முஸ்லிம்.

عن قتادة أن أنس بن مالك حدثهم أن أم سليم حدثت أنها سألت نبي الله صلى الله عليه وسلم عن المرأة ترى في منامها ما يرى الرجل فقال رسول الله إذا رأت ذلك المرأة فلتغتسل فقالت أم سليم واستحييت من ذلك قالت وهل يكون هذا فقال نبي الله صلى الله عليه وسلم نعم فمن أين يكون الشبه إن ماء الرجل غليظ أبيض وماء المرأة رقيق أصفر فمن أيهما علا أو سبق يكون منه الشبه رواه مسلم

உம்மு சுலைம்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம், ஓர் ஆண்மகன் தூக்கத்தில் காண்பதைப் போன்று தனது தூக்கத்தில் காணும் பெண்ணைப் பற்றி (அவள் மீது குளியல் கடமையாகுமா? என்று) கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள், அவ்வாறு ஒரு பெண் கண்டால் அவள் குளித்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். (இவ்வாறு நான் கேட்டு விட்டு) அதற்காக நானே வெட்கப்பட்டேன்.

மேலும் இவ்வாறு (பெண்ணுக்கு தூக்கத்தில் ஸ்கலிதம்) ஏற்படுமா? என்றும் கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள், ஆம் பிறகு எப்படி (தாயின்) சாயல் (சேயில்) ஏற்படுகிறது? ஆணின் நீர் (விந்து) வெண்மை நிறத்தில் கெட்டியானதாக இருக்கும் பெண்ணின் (மதன) நீர் மஞ்சள் நிறத்தில் இளகலானதாய் இருக்கும். இவ்விரு (வரின்) நீரில் எது மேலோங்கி விடுகிறதோ அந்தச் சாயலில்தான் குழந்தை பிறக்கிறது என்று கூறினார்கள்.

(வேறு அறிவிப்பில் அலா என்ற வார்த்தைக்கு பகரமாக சபக் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ளது. இரண்டும் ஒரே பொருளையே குறிக்கும்.) நூல்: முஸ்லிம்.

முஸ்லிம் கிரந்தத்தில் இடம் பெற்றுள்ள இவ்விரு நபிமொழிகளிலும், குழந்தை சாயலைத் தீர்மானிப்பதின் காரணம், ஒன்றை விட மற்றொன்று மேலோங்கி

இருப்பதே என அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் எளிமையாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மிகைத்தல்தான் குழந்தையின் சாயலில் ஆதிக்கம் செலுத்துகிறதே தவிர, முந்துதல் அல்ல என்ற உண்மை அறியப்படுவதற்கு முன்பு வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்கள், சபக் எனும் வார்த்தையை முந்துதல் எனும் அர்த்தத்தில் மொழிபெயர்த்து விட்டார்கள். அதனை அடிப்படையாகக் கொண்டே மற்ற விளக்கங்களையும் அமைத்துக் கொண்டார்கள்.

முஸ்லிம் கிரந்தத்தில் இடம் பெற்றுள்ள நபிமொழியில், மேலோங்குதல் அல்லது மிகைத்தல் எனும் அர்த்தத்தைக் கொண்ட அலா என்ற வார்த்தை கையாளப் பட்டிருப்பதையும், இன்றைய அறிவியல் உண்மைகளையும் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வில்லை. இதனால், முந்துதல் எனும் அர்த்தத்தினை கையாளும் போதுள்ள முரண்பாடினை புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் ஆகிவிட்டது.

(குர்ஆனின் பழைய மொழி பெயர்ப்புகளில் இது போன்ற சில தவறுகள் ஏற்பட்டுள்ளன. அதனை இப்போது திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ளது)

அறிவியல் உண்மை அறிந்து கொள்ளப்பட்ட இந்தக் காலத்திலும் அதே அர்த்தம் எடுத்து எழுதப்பட்டு விட்டது.

*குழந்தையின் சாயலை தீர்மானிப்பது பெற்றோரிடமிருந்து வரும் மரபணுக்கள்தான் என்பது 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக்கால கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியல் உண்மையாகும். இந்த உண்மையை 1430 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒருவர் கூறியுள்ளார் என்றால் அவர் சாதாரண மனிதராக இருக்க முடியுமா?*

இவ்வாறு மொழிபெயர்ப்பில் ஏற்பட்டுவிட்ட தவறுதானே தவிர, உண்மையில் நபிமொழியில் உள்ள தவறு அல்ல. மேலும், நபிமொழிகள், இன்றைய நவீன அறிவியலுக்கு எந்த விதத்திலும் முரண்படுவதாகக் காணவே முடியாது என்பது மட்டுமல்ல, இனி எக்காலத்திலும் நிச்சயமாக அவைகள் முரண்படாது என்பதை நாம் இங்கு தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில், அல்குர்ஆன் எவ்வாறு இறைவனின் கருத்தாக இருக்கிறதோ அது போலவே நபிமொழிகளும் இறைவனின் கருத்துதான். நபி(ஸல்) அவர்கள், இறைவனால் அறிவித்துத் தரப்படும் செய்தியைத் தவிர மனோ இச்சைப்படி வேறு எதையும் சுயமாகக் கூற மாட்டார்கள் என 23வது அத்தியாயம் 3, 4 வது வசனங்களிலும்,

என் மீது இட்டுக் கட்டும் மோசடி வேலையில் ஈடுபட்டால் அவரது நாடி நரம்பை துண்டித்து விடுவோம் அதனை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என 69 வது அத்தியாயம் 44, 45, 46, 47 ஆகிய வசனங்களிலும் அல்லாஹ் குறிப்பிடுகிறான். எனவே, நபிமொழியும் ஒரு வகையில் இறைவனின் கருத்தே தவிர, அவர்களின் சுய சிந்தனையில் உதித்த கருத்தல்ல என்பதால், அவைகள் எக்காலத்திலும் அறிவியல் கருத்தோடு மோதிக் கொள்ளாது. முரண்பாடு இருப்பது போன்று ஒரு நபிமொழியின் கருத்து தொனிக்கிறது என்றால், அதனைப் புரிந்து கொண்ட விதம் தவறு என்றாகுமே தவிர, நபிமொழி தவறானதல்ல. அதனை மறு ஆய்வுக்கு உட்படுத்தும் போது அதற்கான உண்மைப் பொருள் எது? என தெளிவு ஏற்படும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

குழந்தையின் சாயலை தீர்மானிப்பது பெற்றோரிடமிருந்து வரும் மரபணுக்கள்தான் என்பது 19-ம் நூற்றாண்டின் இறுதிக்கால கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியல் உண்மையாகும். இந்த உண்மையை 1430 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒருவர் கூறியுள்ளார் என்றால் அவர் சாதாரண மனிதராக இருக்க முடியுமா? சாதாரணக் கண்களுக்குப் புலப்படாத மரபணுக்களை தோற்றுவித்து, அதற்குள் பெற்றோரின் சாயலை புகுத்தினானே அத்தகைய இறைவன் அறிவித்து தரும் இரகசியச் செய்திகளைக் கேட்கும் தகுதி பெற்ற ஒரு மனிதராகத்தான் இருக்க முடியும். அது போன்ற தகுதியுடைவரைத்தான் இறைத்தூதர் என்று இஸ்லாம் கூறிவருகிறது.

### மிகைக்கப்பட்ட மரபணுக்கள்:

குழந்தையில் பெற்றோரின் சாயல் படிவதற்கு காரணமாக உள்ள மரபணுக்களை அறிந்து வரும் நாம், இது குறித்த இன்னொரு முக்கியமான தகவலை தெரிந்து கொள்ள வேண்டும். அந்த தகவலை அறிந்து கொள்வது வீணான பல சர்ச்சைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடும்.

பெற்றோரின் சாயல்களை சுமந்து வரும் மரபணுக்கள் ஒன்றோடு ஒன்று சேரும் போது சம விகிதத்தில் இருந்தால், பிறக்கும் குழந்தையிடம் அவர்களின் இருவர் சாயலும் சம அளவில் இருக்கும், ஒன்றையொன்று மிகைத்து விடும் போது, மிகைத்தவரின் சாயல் குழந்தையில் படிந்து விடும் என்பதை அறிந்து கொண்டோம். இவ்வாறு நடை பெறுவதுதான் அதிகம் மற்றும் இயல்பானதும் கூட. சில வேளைகளில் பெற்றோர் இருவரின்

சாயலுக்கும் முரண்பட்ட நிலையிலும் சில குழந்தைகள் பிறந்து விடுவதுண்டு. உதாரணமாக சிகப்பு நிறமுள்ள கணவன்-மனைவிக்கு அட்டக் கருப்பு நிறக் குழந்தையும், காரிருள் போன்ற கருப்பு நிறமுள்ள கணவன்-மனைவிக்கு கோவைப்பழம் போன்ற இளம் சிகப்பு நிறக் குழந்தையும் பிறந்து விடுவதுண்டு. இது போன்ற நிகழ்வு ஒரு குடும்பத்தில் நிகழ்ந்து விட்டால், அப்பப்பா! சொல்ல முடியாத சோகங்கள் அக்குடும்பத்தில் குடியேறி வீடே போர்க் களமாக மாறி விடும்.

பிரசவ வேதனை மாறாத மனைவியின் மீது அன்பு செலுத்துவதற்கு பகரமாக நடத்தை கெட்டவள், ஏதோ ஒருவனுடன் கள்ளத்தனமாக தொடர்பு கொண்டு, அவனுக்குத்தான் இக்குழந்தையை பெற்றுள்ளாள் என்று வீணான அவதூறு கணைகளை அள்ளி வீசுகிறார்கள் கணவன் மற்றும் அவனது குடும்பத்தினர்கள்.

அதனை மறுத்து எதிர்வாதம் பேசி, உண்மையை நிலைநாட்ட திராணியற்று சோகமே உருவாக வீற்றிருக்கிறார்கள் மனைவியும் அவளது குடும்பத்தினரும். கட்டப் பஞ்சாயத்து, கோர்ட், கேசு என அலைந்து மணவிலக்குப் பெற்று இறுதியில்

பிரிந்தே விடுகிறார்கள். இவர்களது சண்டைக்கிடையில் மாட்டிக் கொண்ட குழந்தையின் பரிதாப நிலையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. சோகம் நிறைந்த மோசமான விரும்பத்தகாத அனைத்து நிகழ்வுகளுக்கும் காரணம் குழந்தையில் படிந்த சாயல் மாற்றம்தான். இந்த சாயல் மாற்றம் ஏற்பட்டதற்கான உண்மை நிலையை நாம் புரிந்து கொண்டால் உலகில் உள்ள எந்தக் கணவன்-மனைவிகளுக்கும் இடையே இச்சாயல் மாற்றத்தினால் சிறு முணுகள் கூட ஏற்படாது என்பது உறுதி.

எனவே, பெற்றோர்களின் சாயலுக்கு மாற்றமாக குழந்தை பிறப்பதற்கு சாத்தியம் உண்டா.? அது எவ்வாறு நிகழ்கிறது. இது பற்றி இஸ்லாம் என்ன கூறுகிறது, அறிவியல் உலகம் என்ன கண்டு பிடித்துள்ளது? போன்ற அனைத்து விஷயங்களையும்

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் காண்போம்.

*இன்ஷா அல்லாஹ் தொடரும்.*

---

*நபி மூஸா (அலை) ..... 6ம் பக்க தொடர்ச்சி...*

நாடுபவர்களில் ஒருவனாவேன்" என்று கூறினார்.

ஆகவே, அவர் பயத்துடனும், கவனமாகவும் அ(ந் நகரத்)தை விட்டுக் கிளம்பி விட்டார் "என் இறைவா! இந்த அக்கிரமக்கார சமூகத்தாரை விட்டும் நீ என்னைக் காப்பாற்றுவாயாக!" என்று பிரார்த்தித்தார்.

பின்னர் அவர் மத்யன் (நாட்டின்) பக்கம் சென்ற போது என் இறைவன் என்னை நேரான பதையில் செலுத்தக் கூடும் என்று கூறினார். (ஸூரத்துல் கஸஸ் :15-22)

அல்லாஹ்வை பிராத்தனை செய்தவர்களாக மத்யன் என்னும் அழகான பிரதேஷத்திற்கு வருகின்றார்கள் நபி மூஸா(அலை) அவர்கள், அப்பொழுது அவ்ஊர்வாசிகள் தங்கள் தேவைகளுக்காகவும் தங்கள் ஆடுகளுக்கு தண்ணீர் புகட்டுவதற்காகவும் ஒரு கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தனர் இரண்டு பெண்கள் மட்டும் தண்ணீர் எடுக்காமல் சற்று ஒதுங்கியே நின்றிருந்தனர் மக்கள் அனைவரும் தண்ணீர் எடுத்து தங்கள் ஆடுகளுக்கு தண்ணீர் புகட்டி சென்ற பிறகு நாம் நம் ஆடுகளுக்கு தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்றும் மக்களோடு மக்களாக சென்று தண்ணீர் எடுப்பதற்கு கூச்சப்பட்டும் சற்று தாமதமாக வீட்டிற்கு சென்றாலும் பரவாயில்லை என்று மிகவும் வெட்கத்துடன் இரண்டு சகோதரிகளும் நின்று கொண்டிருந்ததை மூஸா(அலை) பார்க்கின்றார்கள் இயற்கையாகவே மூஸா(அலை) அவர்கள் மற்றவர்களுக்காக உதவி செய்பவர்களாகவும் மாசில்லாத தூயவராகவும் திகழ்ந்தார்கள் எனவே கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து அவர்களின் ஆடுகளுக்கு தண்ணீர் புகட்டி அப்பெண்களுக்கு உதவி செய்தார்கள்

இன்னும், அவர் மத்யன் நாட்டுத் தண்ணீர்(த் துறையின்) அருகே வந்தபோது, அவ்விடத்தில் ஒரு கூட்டத்தினர் (தம் கால் நடைகளுக்குத்) தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்ததைக் கண்டார் அவர்களைத் தவிர, பெண்கள் இருவர் (தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் புகட்டாது) ஒதுங்கி நின்றதைக் கண்டார்; "உங்களிருவரின் விஷயம் என்ன? என்று (அப்பெண்களிடம்) அவர் கேட்டார் அதற்கு இம்மேய்ப்பவர்கள் (தண்ணீர் புகட்டிக் விட்டு) விலகும் வரை நாங்கள் எங்கள் (ஆடுகளுக்குத்) தண்ணீர் புகட்ட முடியாது மேலும் எங்கள் தந்தை மிகவும் வயது முதிர்ந்தவர் என்று அவர்விருவரும் கூறினார்கள்.

ஆகையால் அவ்விருவருக்குமாக அவர் (ஆட்டு மந்தைக்குத்) தண்ணீர் புகட்டினார் பிறகு அவர் (ஒரு மர) நிழலில் ஒதுங்கி "என் இறைவா! நீ எனக்கு இறக்கியருளும் நல்லவற்றின்பால் நிச்சயமாக நான் தேவையுள்ளவனாக இருக்கின்றேன்" என்று கூறினார். (ஸூரத்துல் கஸஸ் :23,24)

இரு சகோதரிகளும் தங்கள் வீட்டிற்கு வருகின்றார்கள் இதைக்கண்ட அவ்விருவரின் தந்தையும் மத்யன் வாசிகளுக்காக அல்லாஹ்வின் தூதராகவும் நபியாகவும் இருந்த ஷுஐப்(அலை) அவர்கள் அப்பெண்களை நோக்கி எப்பொழுதுமில்லாமல் இன்று மிக விரைவில் வீடு திரும்பிவிட்டீர்களே காரணம் என்ன என்று வினவினார்கள் அதற்கு அப்பெண்கள் இன்று ஆடுகளுக்கு தண்ணீர் புகட்ட ஒரு வாலிபர் எங்களுக்கு உதவி செய்தார்கள் எனவே இலகுவாக முடிந்தது என்று கூறினர். அப்படியானால் அவருக்கு அதற்கான கூலியை வழங்கிட வேண்டும் என்றும் அவரை இங்கு அழைத்து வரும்படியும் தன் மகளுக்கு ஷுஐப்(அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஆடுகளுக்கு தண்ணீர் புகட்டிவிட்ட களைப்பில் ஒரு மரத்தின் நிழலில் சற்று சாய்ந்தவாறு மூஸா (அலை) இருந்தார்கள். அவ்விருவரில் ஒரு சகோதரி மிகவும் நாணத்துடன் என் தந்தை உங்களுக்கு கூலி கொடுப்பதற்காக என்னை அனுப்பியதாகவும் என்னோடு எங்கள் வீட்டிற்கு வரும்படியும் மூஸா (அலை) அவர்களிடம் அப்பெண்மணி எடுத்துரைத்தார்

(சிறிது நேரத்திற்குப்) பிறகு அவ்விரு பெண்களில் ஒருவர் நாணத்துடன் நடந்து மூஸாவின் முன் வந்து "எங்களுக்காக நீங்கள் தண்ணீர் புகட்டியதற்கான கூலியை உங்களுக்கு வழங்குவதற்காக எங்கள் தந்தை உங்களை அழைக்கிறார்" என்று கூறினார் இவ்வாறாக மூஸா அவரிடம் வந்தபோது தம் வரலாற்றை எடுத்துச் சொன்னார் அதற்கவர் "பயப்படாதீர்! அக்கிரமக்கார சமூகத்தாரை விட்டும் நீர் தப்பித்துவிட்டீர்" என்று கூறினார். (ஸூரத்துல் கஸஸ் :25)

அவ்வழைப்பை ஏற்று மூஸா(அலை) அவர்கள் ஷுஐப் (அலை) அவர்களை சந்திக்கின்றார்கள் தனக்கு ஏற்பட்ட சோதனைகளை அனைத்தையும் ஷுஐப் (அலை) அவர்களிடம் கூறி விட்டு, அதனால் பிர்அவ்னின் கூட்டதார்கள் என்னை கொன்றுவிட திட்டமிட்டுள்ளதாகவும் மூஸா(அலை) அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அதற்கு ஷுஐப்(அலை) அவர்கள் நீங்கள் அவ்வாறு பயப்பட வேண்டாம் பிர்அவ்னின் ஆதிக்கம் இங்கே செல்லுபடியாகாது எனவே அதை நினைத்து கவலைக் கொள்ள வேண்டிய அவசியமில்லை நான் உங்களுக்கு அடைக்கலம் தருகின்றேன் என்று கூறினார்கள் இதைக் கேட்ட மூஸா(அலை) அவர்கள் மனநிம்மதி அடைந்தார்கள். மீண்டும் தொடரும் (இன்ஷா அல்லாஹ்)

*- நாஞ்சிலார்*

# சங்கதிகளும் இங்கிதங்களும்

- உம்மு ரிஃப்அத்

இரு நண்பர்கள் உணவு விடுதிக்குச் சென்றார்கள். இரு தட்டுக்களிலே உணவு கொண்டு வந்து வைக்கப்பட்டது. ஒருவர் முந்திக்கொண்டு அதிக உணவுள்ள தட்டை எடுத்துக்கொண்டார். பெருமிதப் புன்னகை அவர் முகத்தை அலங்கரித்தது.

ஆனால் மற்றவர் இவரைக் கண்டித்தார். முந்திக்கொள்பவர் அதிக உணவுள்ள தட்டைத் தேடி எடுத்துக்கொள்வது சபை ஒழுங்கில்லை என்றார்.

அதற்கு முதலாமவர், நீரென்றால் என்ன செய்திருப்பீர்' என்று சீண்டினார்.

சிறந்ததை மற்றவருக்குத் தருவதுதான் முறை. எனவே, நானென்றால் குறைவாக உணவுள்ள தட்டைத்தான் எடுத்திருப்பேன் என்றார்.

இவர் எப்படியும் எனக்குள்ளதைத்தானே எடுத்திருக்கிறேன். இதிலென்ன தவறு இருக்க முடியும். எல்லாம் ஒன்றுதானே என்று முரணாக விவாதித்தார்.

இவர் செய்தது சரியா? சபை ஒழுங்கு, உண்ணும் பருகும் முறை பற்றியெல்லாம் நாம் எல்லோரும் அறிந்திருக்க வேண்டும் அல்லவா?

எனவே, அவற்றில் சிலவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

1. பிஸ்மில்லாஹ் உடன் ஆரம்பித்து அல்ஹம்துலில்லாஹ் உடன் முடித்தல் தமக்கு அண்மையில் உள்ளதிலிருந்து உண்ணுதல். வலக்கரத்தை உபயோகித்தல். (புகாரி, முஸ்லிம்)

2. உணவில் குறை கூறாதிருத்தல். உண்ண விரும்பாவிட்டால், போதும் என்பதுபோல் எழுந்துவிடல். (புகாரி, முஸ்லிம்)

3. உணவை விரயம் செய்யாதிருத்தல். அளவுக்கு அதிகம் உண்ணாதிருத்தல். (அல்-குர் ஆன் 7:31) வயிற்றின் கொள்ளளவை மூன்றாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் உணவு, நீர், சுவாசத்ததிற்கென்று விட்டு வைத்தல். (அஹ்மத்)

4. உணவுப்பாத்திரத்தினுள்ளே ஊதாமல், மூச்சு விடாமலிருத்தல். (திர்மிதி)

5. அதிக பரக்கத் உள்ளதால், பலர் சேர்ந்து உண்ணுதல். (அபுதாவுத், திர்மிதி)

6. அழைக்கப்பட்ட விருந்திற்குச்செல்லும்போது முன் அனுமதியின்றி மற்றுமொருவரைக் கூட்டிச்செல்லாதிருத்தல். (புகாரி, முஸ்லிம்)

இவை தவிர மேலும் சில ஒழுங்குகள்

கைகளையும் வாயையும் கழுவிக்கொள்ளல். முறையாக உட்கார்ந்து கொள்ளல். பரிமாறும்போது வலதிலிருந்து ஆரம்பித்தல். முதியவருக்கு முதலில் கொடுத்தல். கூட இருப்போர் முகம் சுழிப்பதுபோல் எதையும் செய்யாதிருத்தல். தும்மல், இருமல் வந்தால் மறுபக்கம் திரும்பிக் கொள்ளல். சிறிது சிறிதாக உண்ணல், பருகுதல். உணவை நன்கு மென்று உண்ணல். சிந்தாமல் உண்பதுடன், சிந்தினாலும் எடுத்துச் சுத்தப்படுத்தி உண்ணல். விரல்களில் ஒட்டியிருப்பதையும் வாயில் எடுத்துக்கொள்ளல். உண்டபின் கை, வாய் கழுவுதல். இப்படி நாமும் மற்றோரும் மகிழும் விதமாக நடந்துகொள்வது அவசியம்.

**மற்றுமொரு சம்பவத்தையும் பார்ப்போம்:**

டாக்டர்: வாப்பா எப்படி இருக்கிறார்? வெயிட்டைக் குறைத்திருக்கிறாரா? தொடர்சியாக உடற்பயிற்சி செய்கிறாரா? அவரை ரொம்ப நாளாகக் காணவில்லை?

இளைஞன்: காணவில்லையா? இன்னும் கொஞ்ச நாளில் கூகுள் ஏர்த்திலேயே அவரைக் கண்டுகொள்ளலாம்.

ஏன் இந்த அங்கலாய்ப்பு? வாப்பா கொழு கொழுவென்றிருந்தால் இவனுக்கேன் பிடிக்கவில்லை?

ஏனெனில், மேலதிக உடற்பருமன் என்பது ஒரு கொடிய நோய் எனலாம்.

ஆரம்பத்தில் நித்திரையின்மை, மன உளைச்சல் என்பதுபோல்தான் தோன்றும். பின்னர் அதிகரித்து ஆளையே கொன்றுவிடும்

மேலதிக உடற்பருமன் என்பது 35-40 வயதிற்கு மேற்பட்டவர்களை எப்படியெல்லாம் பாதிக்கும் என்பதைப் பார்ப்போம்.

1. இரத்தக்கொழுப்பு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்.

2. இருதய நோய் வரலாம். 3. நீரிழிவு வரலாம்.

4. மண்ணீரல், சிறுநீரகம், பெருங்குடல் போன்ற உறுப்புகள் புற்று நோயால் பாதிக்கப்படலாம்.

5. பெண்களுக்கு மார்புப்புற்றுநோய் வரக்கூடும்.

6. பலவகையிலும் மரணத்தை வேகமாக வரவழைக்கும். (அதிலும் அடிவயிறு பெருத்திருப்பது மிக ஆபத்தானதாகும்)

நமது எடை பாதுகாப்பான எல்லையைத் தாண்டவில்லை என்பதை உறுதிப் படுத்திக்கொள்வது எப்படி?

மருத்துவர்கள், உங்கள் இடுப்பின் சுற்றளவைக் கவனிப்பதுடன் உயரம், நிறை என்பவற்றைக்கொண்டு உடல்-நிறைக்-குணகம் (Body-Mass-Index) என்பதையும் கண்டறிகிறார்கள். கிலோ கிராம் நிறையை மீட்டர் உயரத்தினால் வகுத்தால் கிடைப்பதுதான் அந்த BMI. உதாரணமாக 60 கி. கி. நிறையும் 1.5 மீ உயரமும் உள்ளவரின் BMI 40 ஆகும்.

நமது நாடுகளில் வாழ்வோர், BMI ஐக் கொண்டு தமது உடற் பருமன் சரியானதுதானா என்பதைப் பின்வரும் தகவலைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

BMI 18 ற்கு கீழ் - மிகக்குறைவு. உணவின் அளவை அதிகரிக்கவும்.

BMI 19-25 – அருமையான, அளவான உடல்.

BMI 26-30 – சற்று அதிகம். உடற்பயிற்சி செய்யவும்.

BMI 31 ற்கு அதிகம் - ஆபத்து! உணவைக் குறைக்கவும். உடற்பயிற்சியை அதிகரிக்கவும்.

உடற்பயிற்சி என்பது தினமும் சுமார் 30 நிமிட நேரத் துரித நடையாகவும் இருக்கலாம்.

ஆனால், சிலர் சாதாரண, மெது நடை நடப்பதை அல்லது நாள் முழுவதும் வீட்டு வேலை செய்வதையெல்லாம் உடற்பயிற்சி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! அப்படியல்ல!

முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, அந்த உடற்பயிற்சியின்போது, உங்கள் இதயம் வேகமாக அடித்துக்கொண்டதா? இல்லையெனில், நீங்கள் உடற்பயிற்சி எதுவும் செய்யவில்லை என்றுதான்

கருதவேண்டும்!

நடக்க ஆரம்பிக்கும்போது, ஓரிரு நிமிடங்கள் மெது ஓட்டம் ஓடி, இதயத்தை வேகமாக அடித்துக்கொள்ள செய்து, அந்த 30 நிமிட நேரத் துரித நடை நடப்பதுதான் சரியான முறையாகும்.

மேலும், அந்த 30 நிமிடத்தில் 3 கி.மீ.தூரம் நடப்பதே துரித நடை என்பதையும் கவனிக்கவும்.

இவையெல்லாம் பெற்றோருக்கான அறிவுரை. இனிச் சிறுவர்களைப்பற்றிக் கவனிப்போம்.

'பெற்றோருக்கு முன்பே பிள்ளைகள் இறந்து போகும் கொடுமை இன்றைய தலைமுறையில்தான் நிகழும் என்று கூறும் ஒரு அறிஞர் அதற்கான முதன்மைக்காரணம் குழந்தைகளின் அளவுக்கதிகமான உடல் நிறை என்கிறார்.

**அது எப்படி என்பதையும் பார்ப்போம்.**

இன்றைய இயந்திர வாழ்க்கையிலே, அதிகமான பெற்றோர் பிள்ளைகளில் செலுத்தும் கவனம் குறைந்து இருப்பதைக் காண்கிறோம். இதனால், பிள்ளைகளின் வாழ்க்கை முறை, உணவுமுறை எல்லாம் முறையற்றுப்போயின.

1. அதிகம் TV பார்ப்பதாலும் கணினியில் அதிக நேரம் மூழ்கிப் போவதாலும் போதிய உடற்பயிற்சி கிடைக்கத் தவறியமை.

2. சரியான, நிறை-உணவு கிடையாமை.

3. நொறுக்குத்தீனி மற்றும் விரைவு-உணவு அதிகம் உட்கொள்ளல்.

4. இயற்கையான உணவு கிடையாமை. தகரத்தில் அல்லது பொதிகளில் அடைத்த மற்றும் வேதிப் பொருட்கள் நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொள்ளல்.

5. பெற்றோர் சண்டை, பிரிவு மற்றும் மறைமுகமான சிறுவர் துஸ்பிரயோகம், வீட்டில் ஒருவருக்குள்ள தீராத நோய் போன்றவற்றால் ஏற்படும் மன அழுத்தம்.

இவற்றால் பாதிக்கப்படும் குழந்தைகள், வளர்ந்தபின்பும் நிரந்தர நோயாளிகளாகி விரைவில் மரணித்து விடுகிறார்களாம்.

இப்படியான ஒரு முடிவை நாம் அனுமதிக்கலாமா? எனவே, நமதும் நமது குழந்தைகளினதும் உணவு, மற்றும் வாழ்க்கை முறையின் அவசியத்தை உணர்ந்து செயற்படுவோம்.

★ ★ ★

# இஸ்லாத்தை ஏற்ற சிங்களப் பெண்ணுக்கு போலீஸ் தடுப்புக் காவல்

புத்த மதத்திலிருந்து விலகி இஸ்லாத்தைத் தழுவியிருந்த இலங்கைப் பெண்ணொருவர் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வளைகுடா நாடான பஹ்ரெய்னை வசிப்பிடமாக கொண்ட இந்தப் பெண் தனது மத மாற்றம் பற்றி அண்மையில் இரண்டு நூல்களை சிங்களத்தில் எழுதியிருந்தார்.

சாரா மாலினி பெரேரா என்ற இந்தப் பெண் இஸ்லாம் மதத்தை மற்ற மதங்களுடன் ஒப்பிட்டு இரண்டு நூல்களை அண்மையில் வெளியிட்டதாகவும் அவற்றில் ஒன்றான 'இருளிலிருந்து ஒளியை நோக்கி' என்ற நூலில் தான் எதற்காக தனது மதநம்பிக்கையை மாற்றிக்கொண்டார் என்று அவர் விபரித்துள்ளதாகவும் அப்பெண்ணின் பஹ்ரெய்னில் உள்ள சகோதரி ஒருவரை மேற்கோள் காட்டி கல்ப் டெய்லி நாளேடு செய்திவெளியிட்டுள்ளது.

மூன்று மாத விடுமுறையில் தனது சொந்த நாடான இலங்கைக்கு சென்றிருந்த சாரா மாலினி அங்கிருந்து இந்த நூல்களில் சிலவற்றை வெளிநாடுகளுக்கு பார்சல் சேவை மூலமாக அனுப்புவதற்கு சென்றிருந்தபோது அங்கு கடமையிலிருந்த பௌத்த தேசிய வாதக்கட்சியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அந்நூலைப் பற்றி போலீசுக்கு அறிவித்துள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து சாரா மாலினி கைது செய்யப்பட்டதாகவும் அவரது சகோதரி கூறியுள்ளார்.

கொழும்பு புறநகர்ப் பகுதியொன்றின் போலீஸ் நிலையத்தில் இந்தப் பெண் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தேசத்துக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான செயல்களில் இவர் ஈடுபட்டுவந்துள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது என போலீஸ் பேச்சாளர் பிபிசியிடம் தெரிவித்தார்.

80களின் நடுப்பகுதியிலிருந்து வளைகுடா நாட்டில் சாரா மாலினி பெரேரா வசித்து வருவதாகவும் 1999ம் ஆண்டில் இந்தப் பெண்ணும் அவரது பெற்றோரும் சகோதரிகளும் கூடவே இஸ்லாத்துக்கு மதம் மாறியுள்ளதாகவும் கல்ஃப் டெய்லி செய்தி கூறுகின்றது.

பௌத்த தேசியவாதம் தற்போது மேலோங்கியுள்ள சக்தியாக விளங்கும் இலங்கையில் பௌத்தவாதக்கட்சியொன்று அரசாங்கத்தின் பங்காளியாகவும் உள்ளது.

இலங்கையின் ஜனத்தொகையில் மூன்றாவது இனக் குழுவாக விளங்கும் முஸ்லிம்கள் அரசியல் பொருளாதார சமூகக் கட்டமைப்பில் முக்கிய இடத்தை வகிக்கின்றனர்.

ஆனால் அங்கு புத்த மதத்தவர்கள் இஸ்லாத்தை தழுவுகின்ற சந்தர்ப்பங்கள் மிக அரிதாகவே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

*நன்றி BBCTamil.com*

ஈருலக வெற்றியின் வழிகாட்டி
"சுவனப்பாதை"
சந்தா சேர்ந்து
பயனடையுங்கள்

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 6:8

### போட்டிக்குரிய கேள்விகள்

**1. கல்வியைத் தேடி ஒருவர் ஒரு வழியில் சென்றால் அவருக்கு இவற்றின் வழியை அல்லாஹ் இலகுவாக்குகிறான்.**

A. பொருளாதாரம் கிடைக்கும் B. சுவர்க்கத்திற்குச் செல்லும் C. பெரும் அறிஞராகும்

**2. அல்லாஹ் என்னை நேர்வழி மற்றும் ஞானத்துடன் அனுப்பியதற்கு உவமையாவது எது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்?**

A. மலையின் மீது விழுந்த பெருமழை போன்றதாகும் B. நிலத்தில் விழுந்த பெருமழை போன்றதாகும் C. வெறும் கட்டாந்தரையில் விழுந்த பெருமழை போன்றதாகும்

**3. நான் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் (என்னுடைய கனவில்) ஒரு பால் கோப்பை என்னிடம் கொண்டு வரப்பட்டது உடனே தாகம் தீருமளவு குடித்து பின்னர் மீதமிருந்ததை உமர்(ரலி) அவர்களுக்கு கொடுத்தேன் என கூற அந்த பாலுக்குத் நபியவர்களின் விளக்கம் என்னவாக இருந்தது?**

A. கல்வி B. பொருளாதாரம் C. வீரம்

**4. பெண்களில் சிறந்தவர்கள் இவர்களே (ஏனெனில்) மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதற்கு வெட்கம் ஒருபோதும் அவர்களுக்குத் தடையாக இருந்ததில்லை.**

A. யமன் பெண்கள் B. மக்கத்து முஹாஜிர் பெண்கள் C. மதீனத்து அன்சாரி பெண்கள்

**5. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் ஒரு மரம் உள்ளது அம்மரத்தின் இலைகள் உதிர்வதில்லை அம்மரம் இறைநம்பிக்கையாளனுக்கு உவமையாகும் அது என்ன மரம்?**

A. பேரீச்சை மரம் B. தென்னை மரம் C. பனை மரம்

**அறிவுப் போட்டி - 6:7 க்கான பரிசு பெறுபவர் : அப்துல் அஜீஸ் அப்துல் மாலிக் – 050 186 8031**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

### விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

### அறிவுப் போட்டி - 6:7 க்கான விடைகள்

1) a) அபூபக்ர்(ரலி) அவர்களை
2) b) முதியவரின்
3) b) முஹம்மது(ஸல்) அவர்கள்
4) C) யமாமா போர்
5) C) அல்லாஹ்வின் பெயரை

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 36 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

اَللَّهُمَّ اهْدِنِيْ لِأَحْسَنِ الْأَعْمَالِ وَأَحْسَنِ الْأَخْلاَقِ لاَ يَهْدِي لِأَحْسَنِهَا إِلاَّ أَنْتَ وَقِنِيْ سَيِّئَ الْأَعْمَالِ وَسَيِّئَ الْأَخْلاَقِ لاَ يَقِي سَيِّئَهَا إِلاَّ أَنْتَ. (ترمذي)

யா அல்லாஹ்! நல் அமல்கள் மற்றும் நற்குணங்களின் பக்கம் உன்னைத் தவிர வேறு யாரும் நேர்வழி காட்டமுடியாதே, அத்தகைய நல் அமல்கள் மற்றும் நற்குணங்களின் பக்கம் எனக்கு நீ நேர்வழி காட்டுவாயாக! கெட்ட அமல்கள் மற்றும் கெட்ட குணங்களிலிருந்து உன்னைத்தவிர (வேறு) யாரும் என்னை பாதுகாக்க முடியாதே, அத்தகைய கெட்ட செயல்கள் மற்றும் கெட்ட குணங்களிலிருந்தும் என்னை (தடுத்து) பாதுகாப்பாயாக! (திர்மிதி)

اَللَّهُمَّ أَصْلِحْ لِيْ دِيْنِيْ، وَوَسِّعْ لِيْ فِيْ دَارِيْ، وَبَارِكْ لِيْ فِيْ رِزْقِيْ. (مجمع الزوائد)

யா அல்லாஹ்! என் மார்க்கத்தை எனக்கு நீ சீர்படுத்துவாயாக! என் வீட்டை எனக்கு நீ விஸ்தீரணப்படுத்துவாயாக! என் உணவில் நீ அருள்புரிவாயாக!. (மஜ்மஃ ஸவாயித்)